Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)


முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 தை 19 வெள்ளிக்கிழமை (01.02.2013) பக்கங்கள் 20 ஓசை – 124













# வடக்கின் அபிவிருத்தி நல்லிணக்கத்தை உருவாக்கும்

## பிரித்தானிய அமைச்சர் நம்பிக்கை



(கொழும்பு)

வடக்கில் யுத்தத்திற்குப். பின்னர் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகார அமைச்சர் அலிஸ்டயார் பேர்ட் தெரிவித்துள்ளார். யுத்தத்தினால் மக்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த மனக்கசப்பை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி பாராட்டத்தக்கது என அவர் கூறியுள்ளார். வடமாகாணத்திற்கான விஜயத்தின போது கேப்பாபுலவு நலன்புரிநிலையத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். யுத்தத்தால் உயிர்கள், குடும்பங்கள், சமூகம் மாத்திரம் அல்லாது நாடுகளும் பிளவுப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியார் கலந்து கொள்வாரா இல்லையா என்பது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் அலிஸ்டர் பேர்ட்டமும் கேள்வி எழுபப்பட்டது.

கொழும்பில் இடம்பெறவுள்ள பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியார் கலந்துகொள்வாரா? இல்லையா? என்பது குறித்து இதுவரை எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா?

### நம்பிக்கையுடன் உள்ளது வொஷிங்டன்

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரவுள்ள புதிய தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று அமெரிக்கா உறுதிபட நம்புகிறது. கொழும்புக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் சிலரை சந்தித்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச்செயலர் ஜேம்ஸ் மூர், இந்தத் தீர்மானம் நேரடியான நடைமுறைத் தீர்மானமாக இருக்கும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அடுத்தவாரம் ஜனாதிபதி திருப்பதிக்கு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மூன்றாவது முறையாக திருப்பதி தரிசனம் செய்யவுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி புத்தகாயாவில் வழிபாட்டில் ஈடுபடவுள்ள அவர், அதன் பின்னர் திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானை தரிசனம் செய்யவுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏழுமலையானை தரிசிப்பதால் மனதில் நிம்மதி

19 ஆம் பக்கம் பார்க்க

## ...அரசுக்கெதிராகப் புதிய காணொளி சனல் – 4 தயாராகிறது

...பிரிட்டனின் சனல் - 4 ஊடகம் இலங்கை தொடர்பான மற்று ...ாரு காணொளியை வெளியிடத் திட்டமிட்டுள்ளதாகத் திவயின ...ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அடுத்த ...நம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ...நாடு நடைபெறும் சந்தர்ப்பத்தில் இந்தக் காணொளி வெளியி...படட உள்ளது. "நோ பயர் ஸோன்" என்ற காணொளியே இவ்...று திரையிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொட...ான பிரசார காணொளியொன்று அண்மையில் பிரிட்டனில் ...வளியிடப்பட்டுள்ளது.

...வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் 40000 பொதுமக்கள் ...ாலை செய்யப்பட்டதாக இந்தக் காணொளியில் பிரசாரம் ...ய்யப்பட உள்ளது. விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ...கப்படக் கலைஞரான பென்ஜமின் டிக்சி என்பவர் இந்தக் ...ணொளி தயாரிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என ...பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ...மக்களின் வீடுகளை அழிக்கும் ...இராணுவத்தின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி

### ...அமைச்சர் தலையிட்டதால் கைவிட்டனர்

...பாதுகாப்புக் காரணங்களுக் ...க கட்டுவன் மேற்கு தெல்லி...ழைப் பகுதியில் இடம்பெயர் ... மக்களின் வீடுகள், - கடை...ளை இடித்து அழிக்க இராணு...த்தினர் மேற்கொண்ட முயற்சி ... அமைச்சர் டக்ளஸ் தேவா...ந்தாவின் தலையீட்டை அடு...த்து நேற்று முற்றாக இடை...நிறுத்தப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வாழ்ந்த மக்...ள் இடம்பெயர்ந்து பல ஆண்டு...ள் கடந்துவிட்ட நிலையில், ...ங்குள்ள பாழடைந்த கட்டடங்கள், வீடுகளை பாதுகாப்புக்காக இடித்து அப்பகுதிகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

தமது வீடுகள், கடைகள் இடிக்கப்படுவதாக அறிந்த பிரதேச மக்கள் இவ்விடயத்தை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு உடன்கொண்டு வந்திருந்தனர்.

இச்சம்பவம் குறித்து ஈ.பி.டி.பி.யின் வலி.வடக்கு பிரதேச இணைப்பாளர்களான ஜெயபாலசிங்கம் அன்பு, மகேந்திரம் வள்ளுவன் மற்றும் பிரதேச உளளூர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்களின் வேண்டுதலைக் கவனத்தில் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.கட்டளைத் தளபதி ஹத்துருசிங்கவை உடன் தொடர்பு கொண்டதை அடுத்து இக் கட்டடங்களை அகற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரப் பாடசாலையில் பாலியல் துஷ்பிரயோகம்

### சிற்றூழியர் நையப்புடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இயங்கும் பிரபல ஆரம்பப்பிரிவுப் பாடசாலையில் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவி ஒருவரை அந்தப் பாடசாலையின் 65 வயதுடைய சிற்றூழியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவத்தில் அந்தச் சிற்றூழியர் நேற்று யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமும் அதற்கு முன்னரும் குறித்த சிற்றூழியர் அந்த மாணவியை பயமுறுத்தி இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிவந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த மாணவி பாடசாலை மூடியதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று பகிஷ்கரிப்பு

இன்று தொடக்கம் நாடு முழுவதும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தங்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்கக் கோரியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதாக சங்கத்தின் உப செயலாளர் சி.எஸ்.முத்துகுட தெரிவித்தார்.

# யாழில் ஒருமாத காலத்தில் 59 பேருக்கு டெங்கு நோய்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாத காலத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 59 பேர் டெங்குநோய் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இத்தகவல்களின்படி இந்தக் காலப்பகுதியில் 4 இராணுவத்தினர் டெங்குநோய் தொற்றிற்கு இலக்காகி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது.

சாவகச்சேரிப் பகுதியிலிருந்து ஒருவரும் கே.கே.எஸ். பகுதியில் இருந்து இருவரும், இடைக்காடுப் பகுதியில் இருந்து ஒருவருமாக மொத்தம் 4 இராணுவத்தினரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

– இவ்வாறு நேற்று சுன்னாகம், கோண்டாவில் பகுதிகளிலிருந்து தலா ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## 35 அதிபர்கள் இடமாற்றம்; மேன்முறையீட்டுக்கு இடமில்லை


(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் 7 வருட சேவையினைப் பூர்த்திசெய்ததன் அடிப்படையில் 35 பாடசாலை அதிபர்களுக்கான இடமாற்றங்கள் இடமாற்ற சபையின் சிபார்சுக்கமைவான நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறித்த அதிபர்கள் இன்று முதல் 15.02.2013 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தமக்குரிய புதிய கடமை நிலையங்களில் பதவியேற்பது கட்டாயமானதாகும். இவ் இடமாற்றம் தொடர்பாகவும் எவ்விதமான மேன்முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## வீதிச் சமிக்ஞைகள் அமைக்கும் பணி ஆரம்பம்

(யாழ். நிருபர்)





யாழ். மாவட்டத்தின் பிரதான வீதிகளில் வீதிச் சமிக்ஞைகள் மற்றும் பாதசாரிக் கடவைகள் என்பன அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஒப்பந்தகாரர்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக வீதித் திட்டப் பணிகளுக்குப் பொறுப்பான திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஏ-9 வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய நான்கு வீதிகளுமே புனரமைப்புச் செய்யப்படடு வருகின்றன.

வீதி விஸ்தரிப்புப் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடைந்த பின்னரே பாதுகாப்புக் கடவைகள், பாதுகாப்புக் குறியீடுகள் அமைக்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வீதிக் குறியீடுகள், பாதுகாப்புக் கடவைகள் என்பவற்றை முன்னுரிமை அடிப்படையில் அமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதித்திருத்த வேலைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களிடம் விடுத்த வேண்டுகோளைத தொடர்ந்து சகல பிரதான வீதிகளிலும் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. (10)


மகாத்மா காந்தியடிகளின் 65 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று யாழ். மகாத்மா வீதியில் அமைந்துள்ள காந்தியடிகளின் உருவச்சிலைக்கு அகில இலங்கை காந்திசேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதையும் வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் சங்கத்தின் உறுப்பினர்கள் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டிருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (படங்கள் - பார்த்தீபன்)

## நடமாடும் சேவை

(மருதனார்மடம்)

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான இலவச நடமாடும் சேவை நேற்று செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவை பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இதில் அடையாள அட்டை புதுப்பிப்பு, தொலைத்தவர்களுக்கு புதிய அடையாள அட்டை, பெயர் மாற்றம் செய்யப்பட்டு அடையாள அட்டை வழங்கல் என்பன இடம்பெற்றது. அத்துடன் திருமணப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. (17)

## விளையாட்டுப் போட்டி ஆரம்பம்

(ஆனைக்கோட்டை)

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதற்கமைய இன்று ஆண்கள், பெண்களுக்கான கிரிக்கெட் போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்திலும், 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான எல்லேப் போட்டி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை ஆண்கள், பெண்களுக்கான கபடி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும், 9 ஆம் திகதி சனிக்கிழமை ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும், 16 ஆம் திகதி ஆண்கள் உதைபந்தாட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான உதைபந்தாட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

23 ஆம் திகதி சனிக்கிழமையும் 24 ஆம் திகதியும் மெய்வல்லுநர் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (104)

☆ ☆ ☆ ☆

முல்லைத்தீவு விநாயகபுரம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

பாடசாலையின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் மைதானம் ஆகிய பகுதிகளை துப்புரவு செய்யும் வகையில் பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இப்பாடசாலையின் விளையாட்டுப் போட்டி ஓரிரு தினங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (140)

## க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

இணையத்தளம் வாயிலாக நேற்று முன்தினம் இரவு வெளியாகிய 2012 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளில் எமக்குக் கிடைத்த யாழ். முன்னணிப் பாடசாலைகள் சிலவற்றின் பெறுபேறுகள்

யாழ். இந்துக் கல்லூரி கணிதப் பிரிவில் 8 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இதில் இரு மாணவர்கள் ஆங்கில மொழியில் 3ஏ சித்தியைப் பெற்றிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஏ2பி சித்தியை 4 மாணவர்களும் 2ஏசி சித்தியை 2 மாணவர்களும் பெற்றுள்ளனர். வர்த்தகப் பிரிவில் 6 மாணவர்கள் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். 3 மாணவர்கள் 2ஏபி சித்தியையும், 2 மாணவர்கள் 2ஏசி சித்தியையும் பெற்றுள்ளனர்.

கலைப்பிரிவில் ஒருமாணவன் 2ஏபி சித்தியையும் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 10 மாணவர்கள் 2ஏபி சித்தியையும், 2 மாணவர்கள் ஏ2பி சித்தியையும், 2 மாணவர்கள் 2ஏசி சித்தியையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அனைத்துப் பிரிவுகளிலுமாக மொத்தம் 16 மாணவிகள் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர். இவர்களில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மாணவி ஒருவர் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் கலைப் பிரிவில் மாணவி ஒருவர் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் 14 மாணவர்கள் 2ஏபி சித்தியையும், 3 மாணவர்கள் 2ஏசி சித்தியையும், 11 மாணவர்கள் ஏ2பி சித்தியையும் பெற்றுள்ளனர். (பா)

### தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி

**உயிரியல்**



ச.வேணிலன்

ச.வேணிலன் 3A (மாவட்ட நிலை 7), பு.திருமாறன் A,2B (மாவட்ட நிலை 42), இ.குகப்பிரியா B,2C, அரண்ராஜ் 3C, தர்சன் 3C, பகவதி 3C, மு.தர்சனா 3C

**கணிதம்**

ந.கிருசாந்த் 2A,B (மாவட்ட நிலை 29), ஜெ.பிறேமன் 2A,B (மாவட்ட நிலை 59), இ.பகீரதன் 2A,C, வா.சுவேதாரண்யன் A,B,C, ஜெ.ஜெயக்கமலன் B,2C, கே.வேணுதாஸ் B,C,S, வெ.தர்சா 3C, ச.கோகுலன் 3C, மு.சஞ்சயன் 2C,S

**வர்த்தகம்**



ப.பகீரதி



கீர்த்திகா

ப.பகீரதி 3A (மாவட்ட நிலை 21), ஞ.கீர்த்திகா 3A (மாவட்ட நிலை 41), மு.கிருஸ்ணா 2A,B, ந.விலாசினி 2A,C, க.தேனுகா A,2S, க.பகீரதா 2B,C, சே.சஞ்சிகா B,2C.

**கலைப்பிரிவு**

சி.ஸ்ரீகௌதமி 2A,B, க.நேமினா A,2B, ஞா.மேரிலாஷா A,2B, அ.உதயசாந்தினி A,B,C, ஆ.அயிதா A,B,C, ஞா.சேருசன் A,B,S.

### நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**வர்த்தகம்**

க.நிரோசன் 3A, ச.சங்கர் 3A, சூ.வித்தகன் 2A,B, ஸ்ரீ.அகிலன் 2A,B, ஸ்ரீ.மயூரன் 2A,B

**கணிதம்**


ஜெ.குகப்பிரசாந 2A,B, சி.துவாரகன் A,2B, பா.டிலக்ஷன் A,B,C, அ.மோகன்லால் (ஆங்கிலமொழிமூலம்) A,B,C, ப.ஹரிதர்சன் B,2C

**உயிரியல்**

பு.பிரவீணன் 2A,C, பா.பிரியதர்சினி 2B,C, வி.பிரியா B,2C

**கலை**

வி.ஆஷா A,2B, மு.அபிராம் A,2B, இ.பிரசாத் A,2B, பா.சாதனா A,2B



நெல்லியடி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்திற் குட்பட்ட பொது மக்களுக்கான இரத்தப்பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் நேற்று சங்க காரியாலயத்தில் நடைபெற்றபோது பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அதிகாரி டாக்டர் வாசுதேவன் மருத்துவப் பரிசோதனை செய் வதைக் காணலாம். (18)

# உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் குறித்து அதிரடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் முதல்வர், ஆணையாளர், சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் பணிப் பின் பிரகாரம் 26 ஆம் இலக்க 1980 ஆம் ஆண்டு உணவுச் சட்டத்திற்கும் அதன் திருத் தங்களுக்கும், இறுதியாக வெளிவந்த உணவு ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும், யாழ்.மாநகராட்சி மன்ற எல் லைக்குள் அமைந்துள்ள 9 பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் அண்ணளவாக அமைந்துள்ள 250 நிலையங் களில் 117 நிலையங்களில் குறைபாடுகள் இருப்பது இனங் காணப்பட்டு அறிவித்தல் வழங் கப்பட்டுள்ளதாக யாழ்.மாநக ராட்சி மன்ற பதில் உணவுப் பரிசோதகரும், பிரதம பொதுச் சுகாதார பரிசோதகருமான க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள் ளார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

ஏனைய நிலையங்களுக்கும் இக்குறை பாடுகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் அறிவித்தல் கள் வழங்கப்பட நடவடிக்கை 01.01. 2013 இல் இருந்து எடுக் கப்பட்டு வருகிறது. முதலில் கூடியளவு தரம் குறைவான நிலையங்கள் என மதிப்பீடு செய்யப்பட்ட வற்றிற்கு முன்னு ரிமை அடிப்படையில் அறிவித் தல்கள் வழங்கப்பட்டு வருகின் றது.

அறிவித்தல் வழங்கப்பட்டு இதுவரை குறைபாடுகளை நிவர்த்தி செய்யாதவர்களுக்கு பதின்நான்கு நாட்கள் கால இடைவெளியில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மொத்தம் 11 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 07.02.2013 ஆம் திகதிக்கு முன் னர் இக்குறைபாடுகளை நிவர் த்திசெய்யும்படியும், மொத் தமாக இப்பதினொரு வழக்கு களுக்கும் ரூபா 56,000 தண் டப்பணமாக அறவிடப்பட்டுள் ளது. மேலும் 07.02.2013 ஆம் திகதிக்கு முன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாதுவிடின் மேற்படி நிலையங்களை பூட்டு வதற்கு நடவடிக்கை எடுக்கப்ப டும் என எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளது.

மேலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த ஒரு நிலை யத்தை மூடும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், திருத்தங் களை செய்தபின் நீதிமன்றத் தின் கவனத்திற்கு கொண்டு வந்த பின்னரே மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும் எனவும் நீதி மன்றம் கட்டளையிட்டது.

இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவித்த லின் பிரகாரம் ஒன்பது உணவு கையாளும் நிலையங்கள் தாமா கவே தமது நிலையங்களை பூட்டியுள்ளன. தற்போது நடை பெற்றுவரும் பரீட்சனையில் மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் உணவு கையாளுபவர்கள் பெற்றிருத்தல், அச்சிட்ட தாள் களில் உணவுப் பொதியாக்கல், ஏனைய உணவுடனான தேவை களுக்குப் பயன்படுத்தலை தவிர்த்தல், உணவுப் பொருட் களை இடுக்கி அல்லது கையு றையுடன் விநியோகித்தலை மேற்கொள்ள ஆவன செய்தல், தூய்மையான குடிநீர் வழங்கல், ஊழியர்களின் தனிநபர் சுகா தாரம், சீருடை அணிந்திருத்தல், உணவுப்பொருட்கள் தொற்று ஏற்படாதவாறு களஞ்சியப் படுத்தல், காலாவதியான உண வுப்பொருட்கள் பாவனையைத் தடைசெய்தல், உணவு தயாரிப் பதற்கு பாவிக்கின்ற பொருட் கள் மரக்கறிவகைகள், இறை ச்சி, மீன், முட்டை வகைகளின் தரமும் அதன் களஞ்சியப் படுத்தும் முறைமையும் உரிய முறையில் செயற்படுத்த நட வடிக்கை எடுத்தல், சுற்றாடல் சுகாதாரம் பேணல், என்பன முன்னிலைப் படுத்தப்பட் டுள்ளன.

எனவே உணவு கையாளும் நிலையங்களின் உரிமையா ளர்கள் மேற்குறிப்பிட்டவற்றை கவனத்திற்கொண்டு செயற் படுமாறு அவர் கேட்டுக்கொண் டுள்ளார்.

## பருவம் தப்பிய மழையால் நிலக்கடலை செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பருவம் தப்பிய காலமழை காரணமாக நிலக்கடலை பயி ரிட்டோர் அதனை அறுவடை செய்யமுடியாத நிலையில் அவ திப்படுவதாகத் தெரியவரு கிறது.

வன்னிப்பிரதேசத்தில் பெரும் ...லான பகுதிகளில் நிலக் ...டலைப் பயிர்களை அறுவடை செய்வதற்கு நிலம் ஈரலிப்பு போதாத நிலையில், அதன் பய னாளிகள் நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் நீர் இறைத்தும் ஒவ்வொன்றாக மண்வெட் டியால் கொத்தி எடுத்தும் வரு வதாகக் கூறப்படுகிறது.

கடந்த வருட இறுதியில் பெய்த அடைமழை காரணமாக சில பயனாளிகளின் நிலக் கடலைப் பயிர்கள் அழிந்துள்ள நிலையிலும், பருவம் தப்பிய மழையினாலும் விதைப்பினா லும் நிலக்கடலை பயிரிட்டோர் தற்போது பல சிரமங்களையும், நஷ்ட நெருக்கடிகளையும் எதிர் நோக்கி வருவதாக அறிய முடிகின்றது. (138)

## வினாடி - வினாப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிற் கிடையே GIZ, ESC நிறுவனங் களின் அனுசரணையுடன் நடத்தப்பட்டிருந்த வினாடி - வினாப் போட்டி முடிவுகள் ...லயக் கல்விப் பணிப்பாளரி னால் அறிவிக்கப்பட்டுளது.

இப்போட்டிகளின் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வர்களின் விபரம் பின்வருமாறு:

முதலாம் பிரிவு

பி.சாணு (தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி), ச.சுகன்யா (சண்டிலிப்பாய் இந்துக்கல் லூரி), ஜெ.சஞ்சீவன் (நடேஸ் வராக்கல்லூரி), இருவர் 4 ஆம் இடம் ஜெ.அபிராமி (மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்), ரி.ரேணுஜன் (தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி)

இரண்டாம் பிரிவு

எஸ்.திவிபரன் (தெல் லிப்பளை யூனியன் கல்லூரி), வி.சங்கீத் (தெல்லிப்பளை மகா ஜனாக் கல்லூரி), எஸ்.லவன் (தெல்லிப்பளை யூனியன் கல் லூரி), இருவர் 4 ஆம் இடம் ரி.கஜிதா (சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி) , ரி.ஸ்ரீரங்கன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரி)

மூன்றாம் பிரிவு

கே.ஜெயரூபன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்), வி.கஜன்சிகா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), கே. பிரதீப் (பிரான்பற்று கலை மகள் வித்தியாலயம்), ரி. நிரோசன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), எம்.விதுர்சன் (விக் ரோறியாக் கல்லூரி) (06)

## தேசமானி விருது



சிறந்த சமூக சேவையாளர் களுக்கு வழங்கப்படும் தேச மானி விருது லயன் செல்வ ராஜாவுக்கு வழங்கப்பட்டுள் ளது.

சிறந்த சமூக சேவையாளர் களுக்கான அகில இலங்கை ரீதியாக வழங்கப்படும் உயரிய விருது வழங்கும் வைபவம் அண்மையில் நுவரெலியா ஏஞ்சல் பார்க் ஹோட்டலில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் லயன். S.J. செல்வராஜா. JP,MJF உயரிய விருதான தேசமானிவிருதுடன் லங்காபுத்திர மற்றும் விஸ்வ கீர்த்தி ஆகிய மூன்று தேசிய விருதுகள் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

## இஸ்லாமியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அராலி வீதியிலுள்ள புதிய சோனகத்தெரு பள்ளிவாசலில் ரபியுர் அவ்வல் இஸ்லாமிய போட்டிகள் இன்று வெள்ளிக் கிழமை மாலை நடைபெற வுள்ளன.

தொடர்ந்து விசேடமாக உல மாக்களின் மார்க்க பிரசங்கமும் (பயான்) உலாமாக்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறும்.

போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசும் வழங் கப்படுவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இவ்விழாவை யாழ்.புதிய சோனகத் தெரு ஊக்குவிப்புக் குழுவினர் மேற் கொள்கின்றனர். (105)

## இலத்திரனியல் அட்டைக்கு ஆவணங்கள் கோரல்

(அச்சுவேலி)

அக்ரகார தேசிய நம்பிக்கை காப்புறுதி நிதியத்தின் காப்பு றுதி அங்கத்தவர்களுக்கு இலத்திரனியல் அட்டைகளை வழங்குவதற்காக காப்புறுதி நிலையத்தினால் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காப்புறுதி அங்கத்தவர் களுக்கு தாமதமின்றிய துரித சேவையினை வழங்கும் நோக் குடன் இத்திட்டம் அறிமுகப்ப டுத்தப்பட இருப்பதால் அங்கத் தவர்களிடமிருந்து அது தொடர் பான ஆவணங்கள் கோரப்பட் டுள்ளன.


மேற்படி திட்டத்தில் இணைத துக் கொள்ளப்படும் அங்கத்த வர்களைப் பிறப்புச் சான்றிதழ் (உரிய அலுவலர் அல்லது தங்கி வாழ்வோர்), தேசிய அடை யாள அட்டையின் பிரதி, விவா கச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதப் பிரதி, கடவுச்சீட்டு அள விலான இரு வர்ணப் புகைப் படங்கள், கடைசி மாத சம்பள விபரம் ஆகியவற்றை அதிப ரின் உறுதிப்படுத்தலுடன் வல யக்கல்விப் பணிப்பாளருக் கூடாக இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்குமாறு தேசிய நம்பிக்கை காப்புறுதி நிதியத் தினால் அறிவுறுத்தப்பட்ட டுள்ளது. (03)

## முதியோர் அபிவிருத்திப் பேரவை அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்ட முதி யோர் அபிவிருத்திப் பேரவை அமைக்கும் நடவடிக்கையை அரசாங்க அதிபர் திருமதி ரூப வதி கேதீஸ்வரன் மேற் கொண்டுள்ளார்.

எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 10 மணிக்கு இதற்கான கூட்டம் அரசாங்க அதிபரின் தலைமையில் மாவட்டச் செய லகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேச செயலகப் பிரிவுகளில் கிராமங்கள்தோறும் இயங்கி வரும் முதியோர் சங் கங்களின் தலைவர், செயலா ளர்கள், பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் ஓய் வூதியர் நம்பிக்கை நலன்புரிச் சங்கத்தின் தலைவர், செய லாளர், உட்பட 5 பேரையும், பிரதேசசெயலகப் பிரிவுகளின் சமூக சேவைகள் அலுவலர், முதியோர் உரிமைகள் மேம் பாட்டு அலுவலர் ஆகியோரை யும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)



யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அண்மையில் ஆபத்தான நிலையில் முறிந்துதொங்கும் தொலைத் தொடர்பு கம்பத்தைக் காணலாம். (54)

வெற்றியின் போது கை தட்டும் அந்த பத்து விரல்களை விட, தோல்வியின் போது கண்ணீர் துடைக்கும் ஒரு விரலுக்கே மதிப்பு அதிகம். பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வல்லரசு நாடுகளை எதிர்த்தல்!

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்குலக நாடுகள் நேட்டோ என்ற பெயரிலான கூட்டணி அமைத்துக்கொண்டு ஏனைய சிறு சிறு நாடுகளை எல்லாம் மிரட்டித் தான்தோன்றித்தனமாக நடந்து வருவது குறித்து உலகின் பெரும்பான்மையான நாடுகளுக்கு அதிருப்தியும் பொருமலும் உண்டு.

முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், வல்லரசு, எதேச்சாதிகாரம் என்றெல்லாம் அறிஞர்களும் முற்போக்காளர்களும் காலங்காலமாகக் கண்டனங்களைத் தெரிவித்து வருகிறார்கள். சில நாடுகளின் தலைவர்களே துணிச்சலாகவும் முழு அக்கறையுடனும் இந்த வல்லரசு நாடுகளை எதிர்ப்பதில் உலக நாயகர்களாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீப காலத்தில் அமெரிக்காவுக்குத் துணிச்சலாக எதிர்வினையாற்றிய சதாம் ஹுசைனும் முஅம்மர் கடாபியும் அழிக்கப்பட்டார்கள். இன்று அத்தகைய எதிர்வினையாற்றிக் கொண்டிருப்பவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் ஈரானின் அஹமதி நெஜாத். இன்னொருவர் வெனிசூலாவின் ஹியூகோ சாவேஸ்.

சைமன் பொலிவர், சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ போன்ற போராளிகளின் வழியில் அசாத்திய துணிச்சலைக் காட்டுபவர் சாவேஸ். பலரால் புரட்சியாளராகவும் பார்க்கப்படுகிறார்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஐ.நா. பொதுச் சபையில் பல நாட்டுப் பிரதிநிதிகள் கூடியிருந்தபோது, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை "சாத்தான்" என்று திட்டினார். சாவேஸ் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. இது தொடர்பாக பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்தபோதும், தனது பேச்சில் இருந்து பின்வாங்கவோ, வருத்தம் தெரிவிக்கவோ மறுத்துவிட்டார்.

"அமைதியாக இருக்கும் நாடுகளில் கலகத்தை உருவாக்கி, குண்டுகளை வீசும் ஆளை எப்படி அழைப்பீர்கள்?" என்று திருப்பிக் கேட்டார். "கொடுங்கோலன், போதைப் பொருள் கடத்துபவன் என்றெல்லாம் புஷ் என்னை வசை பாடியபோது உங்கள் அக்கறை எங்கேயிருந்தது?" என்று சாதுரியமாக வாதிட்டார். இப்படிப் பேசுவதும் நடந்து கொள்வதும்தான் சாவேஸின் குணம்.

அதுபோலவே ஈரான் ஜனாதிபதி அஹமதி நெஜாத்தும் வல்லரசுகளை எதிர்ப்பதில் பின்வாங்காதவராக இருக்கிறார். "மேலைநாடுகள் இரட்டை நாக்குகள் கொண்டவை. அணு ஆயுதங்களை அவர்கள் வைத்துக்கொள்ளலாம் ஆனால், நாம் (ஈரான்) வைத்துக்கொள்ளக்கூடாது என்கிறார்கள்" என்று பேசுவது மட்டுமில்லை, யுரேனியம் செறிவூட்டுவதை நிறுத்தாது தொடர்கிறார்.

அணுஆயுதம் தயாரித்துவிட்டதாக ஈரான் சொல்லவில்லை என்றாலும், யுரேனியத்தைச் செறிவூட்டும் திறனை மும்மடங்கு உயர்த்தியுள்ளது என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஈரான் மீது பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம் ஈரானின் அணுஆயுதத் தயாரிப்பு திட்டத்தை தாமதப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கின்றன. இந்தப் பொருளாதாரத் தடை ஈரானை ஒன்றும் செய்துவிடாது என்று ரஷ்யா கூறுகிறது. சீனாவும்தான்.

தீவிரவாதத்தை ஊக்குவிப்பதாக ஈரான் மீது குற்றச்சாட்டை வைக்கிறது இஸ்ரேல். பதிலுக்கு நெஜாத், ஈரானிய அணுநிலைய ஆராய்ச்சியாளர் ஒருவர் பட்டப்பகலில் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை யாருமே கண்டிக்கவில்லையே, ஐக்கிய நாடுகள் சபை இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையே என்று திருப்பிக் கேட்கிறார்.

அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் ஏனைய நாடுகளைப் பயமுறுத்தி அடக்கி வெல்வதனை ஒருவித கையாலாகாத்தனத்தோடு பார்த்துக் கொண்டிருப்பவர்கள், இத்தகைய துணிச்சல்காரர்களை வரவேற்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களால்தான் உலகில் ஓரளவுக்கேனும் வல்லரசு நாடுகளுக்கு எதிரான சமநிலை நிலவுகிறது என்றும் கருதுகிறார்கள்.

ஆனால், சதாம் ஹுசைன், முஅம்மர் கடாபி பட்டியலில் ஹியூகோ சாவேஸும் அஹமதி நெஜாத்தும் சேர்ந்துவிடக்கூடாதே என்பதுதான் பெரும்பாலோர் அச்சம்.

- ஆசிரியர்

# மதபேதங்களை தூண்டுபவர்கள் இனவாதிகள் என்கிறார் வாசு

(கொழும்பு)

தமது மதமே பெரியது தமது மதமே பிரதானமானது எனக் கூறி ஏனைய இனங்கள் மற்றும் மதத்தினரை கண்டனம் செய்யும் நபர்கள் அவர்கள் சார்ந்த மதத்தையும் இனத்தையும் நேசிக்காதவர்கள் எனவும் மத பேதங்களை துண்டும் இவ்வாறானவர்களை இனவாதிகள் என்று கூறுவதைத் தவிர வேறு எந்த வார்த்தைகளும் இல்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொடக்கவெல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தமது இனம் மற்றும் மதம் குறித்து பொய்யான கௌரவத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நபர்கள் சமூகத்தில் தேவையற்ற பீதிகளை ஏற்படுத்தி வருகின்றனர். அவர்கள் சிங்கள இனத்தை அழிக்கின்றனர். முஸ்லிம்கள் பிள்ளைகளை அதிகளவில் பெற்றுக் கொள்கின்றனர் எனக் கூறி சிலர் இனவாதத்தை தூண்டுகின்றனர்.

இது தமது இலாபத்தை எதிர்பார்த்து செயற்படுபவர்களின் நடவடிக்கைகள் எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

தாமே உயர்ந்தவர்கள், தாமே பிரதானமானவர்கள் என சமூகத்தில் நிலைப்பாடுகளை தோற்றுவிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காரணமாக சோசலிசம் ஏற்படப் போவதில்லை. பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகள் சிலவற்றில் இப்படியான நிலைமைகள் காணப்பட்டன.

இறுதியில் அந்த நாடுகளில் யுத்தங்கள் ஏற்பட்டன. இவற்றில் பெரும் எண்ணிக்கையிலான பௌத்தர்கள் கொல்லப்பட்டனர். சிலர் தலைவர்களாவும் வீரர்களாகவும் மாறுவதற்காக செய்யும் இப்படியான நடவடிக்கைகள் சமூகத்தில் கடும் அனர்த்தங்களை ஏற்படுத்தும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# சட்டவிரோத குடியேறிகளுக்கு புகலிடம் அளிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு புகலிடம் அளிக்கப்பட மாட்டாது என அவுஸ்ரேலிய எதிர்க்கட்சித் தலைவி ஜுலி பிசோப் தெரிவித்துள்ளார்.

கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிக்கும் இலங்கையர்களுக்கு சலுகைகள் வழங்கப்படமாட்டாது.

வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சி குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கின் கல்வி அபிவிருத்திக்கு அவுஸ்ரேலியா கூடுதலான ஒத்துழைப்பு வழங்கும். இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படும் என பிசோப் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## மோட்டார் சைக்கிள்களுக்கு இன்றுமுதல் புதிய இலக்கத்தகடு

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்களுக்கான மூன்று ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட வகுப்பிற்கான இலக்கத்தகடுகளை இன்று முதல் பதிவு செய்யவுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வகுப்புக்குரிய இலக்கத் தகடுகளை AAB என முதலில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் எஸ்.எச். ஹரிஸ் சந்திர தெரிவித்தார்.

முச்சக்கர வண்டிகளுக்காக ஏற்கனவே மூன்று எழுத்துக்களைக் கொண்ட வகுப்பிற்கான இலக்கத் தகடுகள் பதிவுசெய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கார்களுக்காகவும் இந்த வருட இறுத்திக்குள் மூன்று ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட வகுப்பிற்கான இலக்கத் தகடுகளை பதிவுசெய்வதற்கு எண்ணியுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் குறிப்பிட்டார். கார்களுக்கான இரண்டு ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட வகுப்பின் கீழ் மேலும் 40 ஆயிரம் வரையான வாகனங்களைப் பதிவுசெய் வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

## விடைத்தாள் மீள்பரிசீலனை; 22 வரை விண்ணப்பிக்கலாம்

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இணையத்தினூடாக நேற்றுமுன்தினம் மாலை வெளியிடப்பட்டுள்ளன. இதேவேளை உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிப்பதற்கு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை பரீட்சைகள் திணைக்களம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை தத்தமது பாடசாலை அதிபர்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார். பெறுபேறுகளுடன், விடைத்தாள் மீள் பரிசீலனைக்கான விண்ணப்பப்படிவங்களை நாட்டிலுள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேசிய செய்திப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் அறிவித்தலுக்கு அமைய மீள்பரிசீலனைக்காக விண்ணப்பிக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

இதேவேளை பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பரீட்சைகள் திணைக்களம் தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 011 278 4208, 011 278 4537, 011 318 8350 , 011 314 0314 அல்லது அவசர அழைப்பு இலக்கமான 1911 என்ற இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களின் சாரதி மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்காலிகமாக விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை வேறு நபர்கள் மோசடியாகப் பயன்படுத்தி சாரதி மற்றும் நடத்துநர் சேவையில் ஈடுபடுகின்றமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சாரதி மற்றும் நடத்துநர்களுக்கான பயிற்சி நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு தற்காலிக அனுமதிப் பத்திரத்தை தம்வசம் வைத்துள்ளவர்களுக்கு உரிய அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களை வழங்கவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறந்த சேவையை வழங்குதல், மக்கள் தொடர்பாடல், விபத்துக்களைத் தவிர்த்தல், பயணச்சீட்டின் முக்கியத்துவம், போதைப்பொருள் பாவனையுடன் வாகனம் செலுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல், பஸ்களுக்குள் இடம்பெறுகின்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பிலும் இந்தப் பயிற்சியின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009ஆம் ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை.**

# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும் 03

சாத்திரி



**தலைவரே நேரிலை கதைத்தாரா என வாயை பிளந்தபடி ஆச்சரியமாக கேட்டவர்களிற்கு கண்ணன் தொடர்ந்து தலைவர் கதைத்த கதையை சொன்னார். அதாவது ஆபிரிக்காவின் ஒரு நாட்டின் கடற்கரையோரமாக ஒரு கப்பல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றது. அதில்தான் தலைவர் தங்கியிருக்கிறார். அங்கிருந்துதான் சட்டிலைற் தொலைபேசி ஊடாக தன்னோடு கதைத்தாகவும் சொன்னவர், தான் தலைவரோடு கதைத்ததை உறுதி செய்வதற்காக இன்று அவர் கோழி சமைத்து உண்டதாக மேலதிக இலவச இணைப்பு தகவலையும் சொல்லியிருக்கிறார்.**

மூன்றாவது மாவீரர் தினத்தினை இலண்டனில் திடீரென அறிவித்தவர் புலிகள் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினரும் பிரபாகரனின் நண்பருமான மண்டைக் கண்ணன் என்று அறியப்பட்டவர். புலிகள் அமைப்பில் குண்டப்பா என்கிற பெயரோடு புலிகள் அமைப்பின் பயிற்சிக்கு இந்தியாவிற்கு போகின்றவர்கள் மற்றும் இந்தியாவில் இருந்து அமைப்பிற்கு ஊருக்கு அனுப்பப்படும் பொருட்கள் ஆகியவற்றை கவனிப்பதற்கு கடற்கரைக்கு பொறுப்பாக இருந்தவர். அதே நேரம்



புலிகள் அமைப்பின் முடிவிற்கு பிறகு புலிகளால் பிரேமதாசா காலத்தில் மாத்தையாவை தலைவராக்கி அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்ட 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்கிற கட்சியை பாலசுப்பிரமணியம் என்பவர் இலண்டனில் சட்டரீதியாகப் பதிவு செய்திருந்தார். இவர்கள் இருவரும் இணைந்தே இந்த மூன்றாவது மாவீரர் நாளை அறிவித்திருந்தனர். பாலசுப்பிரமணியம் என்பவர் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவில் தென்னாபிரிக்காவிற்கு பொறுப்பாக இயங்கியவர். 2001ஆம் ஆண்டு புலிகளின் அனைத்துலக செயலகம் வெளிநாட்டு பிரிவில் மாற்றங்கள் ஏற்படுத்தியபொழுது இவரையும் வன்னிக்கு அழைத்து நந்தவனத்தில் வைத்து (நந்தவனம் என்பது அனைத்துலக பொறுப்பாளர் கஸ்ரோவின் அலுவலகம்) இவரது பதவியும் பறிக்கப்பட்டிருந்தது. திடீரென எதற்காக நீங்கள் மூன்றாவதாக புதியதொரு மாவீரர் தினத்தை அறிவித்தீர்கள் என்று கேட்டதற்கு கண்ணன் என்பவர் சொன்ன பதில் என்னவென்றால், இதுவரை மாவீரர் தினங்களை நடாத்தியவர்கள் அதனை வியாபாரமாக்கி விட்டார்கள். எனவே நீங்கள்தான் இதனை நடாத்தவேண்டும் என்று தலைவரே தங்களுடன் தொடர்பு கொண்டு சொல்லியிருந்தார் என்றிருக்கிறார்.

தலைவரே நேரிலை கதைத்தாரா என வாயை பிளந்தபடி ஆச்சரியமாக கேட்டவர்களிற்கு கண்ணன் தொடர்ந்து தலைவர் கதைத்த கதையை சொன்னார். அதாவது ஆபிரிக்காவின் ஒரு நாட்டின் கடற்கரையோரமாக ஒரு கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அதில்தான் தலைவர் தங்கியிருக்கிறார். அங்கிருந்துதான் சட்டிலைற் தொலைபேசி ஊடாக தன்னோடு கதைத்தாகவும் சொன்னவர், தான் தலைவரோடு கதைத்ததை உறுதி செய்வதற்காக இன்று அவர் கோழி சமைத்து உண்டதாக மேலதிக இலவச இணைப்பு தகவலையும் சொல்லியிருக்கிறார். எது எப்பிடியோ இவர்கள் மூன்றாவது மாவீரர் தினத்தை நடாத்தி அதற்கும் மக்கள் போயிருந்தார்கள். நூறு பேரளவில் வந்ததாக தகவல் சொல்லியிருந்தார்கள். இனிவரும் காலங்களில் இப்படியான பிரிவுகள் மேலும் அதிகரிக்கலாம்.

இனி பரிதி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் பின்னணி பற்றிப் பார்ப்போம். இவர்களில் தாஸ் என்பவரை தவிர, மற்றையவர்கள் பாரிசில் இயங்கும் வன்முறை கும் பல்களில் ஒன்றான 'பாம்புக் குழு' எனப்படும் குழுவைச் சேர்ந்தவர்கள். இவர்களின் ஆரம்பம் சுவிஸ் சூறிச் நகரத்தில் இயங்கியவர்கள் பின்னர் சுவிஸ் காவல்துறையின் கடுமையான நடவடிக்கைகளால் அங்கிருந்து தப்பிவந்து பாரிசில் தொடர்ந் தும் முன்னெடுத்து வருகிறார்கள். அதே நேரம் கடந்த வருடம் இதே காலப் பகுதியில் வெண்ணிலா என்னும் குழுவினரால் பரிதி மீது தாக்குதல் நடத்தப்பட்டது தாக்குதல் நடாத்தியவர்களை பிரெஞ்ச் காவல்துறையினரும் அடையாளம் கண்டு விசாரணைகளை நடத்தியிருந்தார்கள். ஆனால் காலில் வெட்டு வாங்கிய பரிதி, அவர்கள் மீது எவ்வித வழக்குப் பதிவு செய்யமுன்வரவில்லை. அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யும்படி பரிதியின் நண்பர்கள் வற்புறுத்தியிருந்தார்கள். அதற்கு பரிதி சொன்ன பதில் என்னவெனில் பொலிஸ், கேஸ் என்று போனால் பிறகு அவங்கள் இண்டு பக்கமும் நோண்டுவாங்கள். ஏன் வெட்டினது என்று நோண்டத் தொடங்கினால் பாதிப்பு எங்களிற்கு தான் அதிகம். அதாலை பேசாமல் விடுவம் என்றதோடு அப்படியே விட்டுவிட்டிருந்தார்.

அதனால் பிரெஞ்ச் காவல்துறையினரும் பரிதி மீது தாக்குதல் நடாத்தியவர்களை சில நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விட்டு விடுதலை செய்து விட்டார்கள். பிரான்ஸ் நாடு ஜேர்மனி, சுவிஸ் நாடுகளைப் போல வெளிநாட்டு வன்முறை கும்பல்கள் மீது உடனடி நடவடிக்கைகள் எடுப்பது குறைவு. காரணம் பிரான்சில் பலநாடுகளையும் சேர்ந்த பல்லின மக்கள் அதிகம் வாழும் நாடு. அவர்களிற்குள் இது போன்ற வன்முறைக் கும்பல்களும் ஏராளம். இவர்களது பொதுவான தொழில் சிறிய அளவில் இருந்து பெரிய அளவு வரை போதைப் பொருள் வியாபாரம், கப்பம் சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஆட்கடத்தல் என்பனவாகும். அவர்கள் தங்களிற்குளேயே அடிபட்டுக் கொள்வார்கள். இடைக்கிடை கொலைகளும் விழும். இவர்கள் பற்றிய விபரங்கள் அனைத்தையும் பிரெஞ்ச் காவல்துறை திரட்டிக்கொண்டே இருப்பார்கள். இந்த கும்பலால் பிரான்ஸ் நாட்டின் பாதுகாப்பிற்கோ அல்லது பிரெஞ்சு மக்களிற்கு ஆபத்து என்று வரும் போதுதான் செயலில் இறங்குவார்கள். மற்றபடி இந்த குழுக்கள் தங்களிற்குள் அடிபட்டாலென்ன சுடுபட்டாலென்ன இதற்காக தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவு செய்ய மாட்டார்கள்.

இதே போலத்தான் தமிழ் குழுக்களிற்கிடையிலான மோதல்களையும் பிரெஞ்ச் காவல்துறையினர் பெரியளவில் கணக்கெடுப்பது கிடையாது. இவர்களிற்கிடையில் மோதுப்பட்டு யாராவது இறந்தாலும் அதனை கணக்குத் தீர்த்தல் என்கிற வகைக்குள் அடக்கி கொலையாளி பிடிபட்டாலும் தண்டனை பெரியளவில் இருக்காது 5 அல்லது 6 வருடங்களில் சிறையை விட்டு வெளியே வந்து விடுவார்கள். இதே போல பரிதி மீது நடந்த தாக்குதலையும் கணக்குத் தீர்த்தல் என்கிற அடிப்படையிலேயே அடக்கியிருக்கிறார்கள். காரணம் பரிதி என்பவர் எம்மவர்களிற்கும் எமது சில ஊடகங்களிற்கும்தான் தளபதி, கேணல், மனித நேய செயற்பாட்டாளர். ஆனால் பிரெஞ்ச் காவல்துறைக்கு அவர் ஒரு குற்றவாளி என்பது மட்டுமல்ல இவர் சார்ந்த அமைப்பும் பிரான்சில் தடை செய்யப்பட்டிருக்கும் ஒரு அமைப்பு. அவர் செய்த குற்றங்களிற்காக மூன்றரை ஆண்டுகள் தண்டனை பெற்றதொரு முன்னைநாள் கைதி என்பதோடு, தொடர்ந்தும் காவல்துறையின் கண்காணிப்பில் இயங்கும் ஒருவர்.

எனவே ஒரு வன்முறைக் குழுவைச் சேர்ந்தவரை இன்னொரு வன்முறைக்குழு கணக்குத் தீர்த்திருக்கின்றது என்பதே பிரெஞ்சுக் காவல்துறையின் பார்வை. ஆனால் இதற்கிடையில் பிரான்சின் முன்னணிப் பத்திரிகையொன்று இந்தக் கொலை இலங்கை தூதரகத்தின் பின்னணியில் நடாத்தப் பட்டதென்று ஒரு செய்தியையும் வெளியிட்டிருந்தது. அதனை தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் பார்ப்பதற்கு முன்னர், பரிதியைக் கொலை செய்தவர்கள் என சந்தேகத்தின் பெயரால் கைதாகி இருக்கும் பாம்பு குழுவினரிற்கும் பரிதிக்கும் இருந்த நெருக்கத்தையும் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

(தொடரும்)

# அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிரான எதிர்ப்பை தெரிவித்தது இலங்கை



(கொழும்பு)

மனித உரிமைகள் தொடர்பிலான ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கெதிரான தீர்மானம் ஒன்றை கொண்டு வரப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளமைக்கு அரசாங்கம் நேற்றுமுன்தினம் தனது உத்தியோகபூர்வமான எதிர்ப்பைத் தெரிவித்தது. இலங்கை வந்திருக்கும் அமெரிக்க உயர் மட்டக்குழுவை நேரடியாக வெளிவிவகார அமைச்சுக்கு வரவழைத்து, அமைச்சர் ஜி.எல. பீரிஸ் இலங்கை அரசாங்கம் சார்பிலான தனது அதிருப்தியை வெளியிட்டிருந்ததுடன், இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றுடனான உறவுக்கு இவ்வாறான நடைமுறை பலமானதாக அமையாதெனவும் சுட்டிக்காட்டியிருப்பதாக அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம கூறினார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் நண்பகல் 2.30 மணியளவில் இச்சந்திப்பு ஆரம்பமானது. இச்சந்திப்பில் அமெரிக்க உயர் மட்டக்குழுவுடன் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவரும் கலந்து கொண்டார். இலங்கை அரசாங்கம் சார்பில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்பட்ட அதே வேளை, ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கெதிராக தீர்மானம் கொண்டு வரப்படும் முறை இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாட்டுக்கான் சரியான நடைமுறையல்ல என்பதனையும் அமைச்சர் விளக்கப்படுத்தினார்.

மேலும் அமெரிக்கா இலங்கைக்கெதிராக தீர்மானம் கொண்டு வருவதில் உறுதியாக இருப்பதால், அதற்குப் பதிலளிக்க அரசாங்கம் தயார் என்பதனையும் அவர் அமெரிக்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்ததாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மோதல்களுக்குப் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அதில் நடைமுறைப்படுத்தப்பட்டவை தொடர்பில் விளக்கமளித்தார்.

இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி நிலைமை குறித்து பார்வையிடுவதும் தமது விஜயத்தின் பிரதான நோக்கமெனத் தெரிவித்த அமெரிக்க பிரதிநிதிகள் குழு, தாம் இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தது.

## யுத்தத்திற்கு பிந்திய தேசிய நல்லிணக்கம் ; சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்த திட்டம்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை கூட்டத்தொடருக்கு முன்னதாக, யுத்தம் நிறைவடைந்த பின்னரான காலப்பகுதியில் அரசாங்கம் தேசிய நல்லிணக்கத்திற்காக மேற்கொண்ட செயற்பாடுகளை சர்வதேச நாடுகளுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சர்வதேசத்திற்குத் தெளிவுபடுத்தும், அறிக்கை வெளிவிவகார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார செயலாளர் கருணா திலக அமுனுகம தெரிவித்தார். இலங்கைக்கு கடந்த சனிக்கிழமை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் மூரே, பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி உதவிச் செயலாளர் விக்ரம்சிங், இராஜாங்க பிரதி உதவிச் செயலாளர் ஜேம்ஸ் சிமர்மன் ஆகியோர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இவ்வறிக்கையை தயாரிக்கும் பணிகள் ஆரம்பமாகின.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜென்வாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தொடரில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அரசாங்கம் எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கிறது என்பது இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதற்கு வெளிவிவகார அமைச்சு தயாரித்து வரும் இவ்வறிக்கை உண்மை நிலையை விளக்குவதற்கு ஒரு சிறந்த ஆவணமாக அமையுமென்று வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை கொண்டுள்ளது.

# அமைச்சர் சம்பிக்கவின் பதவி மாற்ற பின்னணி யார்?

(கொழும்பு)

மின்சாரத்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை அந்தப் பதவியில் இருந்து மாற்றுவதற்கு இந்தியாவே பின்னணியில் இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது

இந்தியாவுக்கு எதிராக அவர் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் மற்றும் சம்பூர் அனல் மின்சார நிலையம் தொடர்பான பிரச்சினைகளே இதற்குக் காரணங்களாக கூறப்பட்டன.

எனினும் சம்பிக்க ரணவக்கவை அந்தப் பதவியில் இருந்து நக்கியமைக்கு சீனாவே காரணம என்று மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அடிக்கடி பிரச்சினையை கொடுத்து வரும் நுரைச்சோலை மின்சார நிலையத்தை செப்பனிட 500 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் முயற்சித்தது.

எனினும் சீன நிறுவனம் முன்வைத்த நிபந்தனைகளை காரணம் காட்டி, சம்பிக்க ரணவக்க அதற்கு எதிர்ப்பை வெளியிட்டு வந்தார்.

இதன் காரணமாகவே அவர், பொறுப்பில் இருந்து மாற்றப்பட்டார் என்று மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் மின்சார



சபையை இந்த வருடத்துக்குள் தனியார் மயப்படுத்த சர்வதேச நாணய நிதியம் திட்டமிட்டுள்ளது.

எனினும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டமை காரணமாகவே சம்பிக்க ரணவக்க பதவி மாற்றம் செய்யப்பட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்

# சர்வதேச அழுத்தங்களை முறியடிக்கும் தைரியம் உள்ளது

## கூறுகிறார் அமைச்சர் பீரிஸ்

அனைத்துலக அழுத்தங்கள் எல்லாம் எமக்குப் புதியவை அல்ல. இந்த அழுத்தங்களை முறியடிக்கும் தைரியம் அரசாங்கத்திற்கு உள்ளதென அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சவால்கள் என்பது வாழ்க்கையிலும், ஆட்சியிலும் அவசியமான ஒரு பகுதி. அரசாங்கம் தனது எண்ணங்களையும் திட்டங்களையும் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வதற்கு எபபோதுமே தயாராக உள்ளது. ஏனென்றால், இந்த அரசாங்கத்தின் ஒட்டுமொத்த பலமே மக்கள்தான்.

போரின் முக்கியமான இறுதிக் கட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த பலம்வாய்ந்த சக்திகள் முயற்சித்தன. அப்போது நாட்டின் அரசியல் தலைமை பணிந்து போயிருந்தால், இன்றைக்கும் அழிவுகள் தொடர்ந்திருக்கும்.

தீவிரவாதம் அழிக்கப்பட்ட பின்னர் எமக்கான பொருளாதார சலுகைகள் விலக்கிக் கொளளப்பட்டன. இப்போது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிகளில் தடைகளை ஏற்படுத்த மனிதஉரிமைகளை ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

இந்தச் சவால்களை முறியடிக்கும் தைரியம் அரசாங்கத்துக்குள்ளது.

போரின் உச்சக்கட்டத்தில் எதிர்கொண்ட சவால்களுக்கு இது சற்றும் குறைவானதல்ல.



இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை.

இன்று அனுபவிக்கும் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மக்கள் அரசாங்கத்தைச் சுற்றி கவசமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# புதிய அரசியல் யாப்பு தயாரிப்பு சட்டத்தரணிகள் குழு நியமனம்

(கொழும்பு)

மகாநாயக்க தேரர்களின் ஆசியுடன் சில அனுநாயக்க தேரர்களின் தலைமையில் பௌத்த மதகுருமார்கள் குழு ஒன்று நாட்டிற்கு புதிய அரசியல் யாப்பு [New Constitution] ஒன்றைத் தயாரிப்பதற்காக முன்னணி சட்டத்தரணிகள் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இச்சட்டத்தரணிகள் குழுவில் ஜே.சி.வெலியமுன, ஜயம்பதி விக்கிரமரத்தின், எல்மோ பெரெரா, எச்.ஜி.புஞ்சிஹேவா, ஷிரால் லக்திலக, ரவி ஜெயவர்த்தன மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த 3 மாதங்களுக்கு இடையில் இக்குழு புதிய அரசியல் யாப்பை தயாரித்து முடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகவலை ஐக்கிய பிக்குகள் முன்னணியின் கருத்தரங்கு ஒன்றில் ரமனாய பீட அனுநாயக்க தேரர் சங்கைக்குரிய கெத்தம்பே ஆனந்த தேரர் வெளியிட்டார்.

புதிய அரசியல் யாப்பு திட்டத்தின் முக்கிய அம்சமாக நாடாளுமன்றத்திற்கு பதிலளிக்கக்கூடிய பிரதம மந்திரி ஒருவரைக் கொண்டதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

நாட்டுக்கு உகந்ததாகத் தயாரிக்கப்படும் புதிய அரசியல் யாப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# பயங்கரவாத இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு தடை

(கொழும்பு)

அல் - கொய்தா மற்றும் தலிபான் அடங்கலாக தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களுக்கு உதவி ஒத்தாசை வழங்குவதைத் தடை செய்யும் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கடப்பாடு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அரசாங்கத்தால் மேற்படி சட்டமூலம் நாடாளு மன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, பயங்கரவாதத்துக்கு நிதி வழங்கலை ஒழித்தல் (திருத்தம்) மீதான சமவாயம் என்னும் சட்டமூலம் விவாதிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை தடை செய்துள்ள பயங்கரவாத நிறுவனங்களுடன் தொடர்புறும் நிதி நிறுவனங்களைத் தடை செய்யும் ஐ.நா.வின் கடப்பாட்டை அங்கீகரிப்பதே இந்தச் சட்ட மூலத்தின் நோக்கமாகும். ஐ.நா இனங்கண்டுள்ள பயங்கரவாத அமைப்புகளின் பட்டியல் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அத்தகவல்கள் குறிப்பிட்டன.

ஐக்கிய நாடுகள் சபை இந்தப் பட்டியலை காலத்துக்கு காலம் மாற்றியமைக்கும். எமக்கு இந்தப் பட்டியலை ஐ.நா பின்னர் வழங்கும். இது பின்னர் வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படும். அங்கத்துவ நாடுகள் யாவும் இவ்வாறு செய்யும் கடப்பாடு உடையன என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டமூலத்தின்படி, பயங்கரவாத நடவடிக்கைகள் அமைப்புகளுடன் செயற்படும் எவரும் குற்றவாளியாவர். அல் - கொய்தாவின் நிதிகளை முடக்குவது தொடர்பாக ஐ.நா சட்டம் இலக்கம் 45,1968 இன் கீழ் இலங்கை அரசாங்கம் சில விதிகளை அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் பல வகை உபாயங்களையும் குறிப்பாக தலிபானுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் இச்சட்டமூலம் குறிப்பிடுகின்றது.

# காணிப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நாவற்குழி மக்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் நிரந்தர காணியில்லாத மக்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்து அவற்றை அந்த மக்களுக்கு உரித்தாக்குவது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

நாவற்குழிப்பகுதியில் ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பள்ளக்காணி என்று அழைக்கப்படும் பகுதியில் 31 ஏக்கரில் 59 குடும்பங்களைச் சேர்ந்தோரும், ஐயனார் கோவில் பகுதியில் 29 ஏக்கரில் 44 குடும்பங்களைச் சேர்ந்தோரும் நிரந்தரக் காணிகளும், நிரந்தர வீடுகளும் இல்லாத நிலையில் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் நிலையில் மக்கள் அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதனடிப்படையில் மக்களது தேவைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமக்கு இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அவகாசம் வேண்டுமெனவும் மாகாண காணி ஆணையாளர் மற்றும் மாவட்ட அரசஅதிபர் ஆகியோருக்கு பிரதேச செயலர் ஊடாகத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்ட அமைச்சர், அங்கு மக்களுக்கு தேவையான மலசலகூடங்களின் தேவைகள் தொடர்பிலான மதிப்பீட்டு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும் நிரந்தர காணி மற்றும் வீட்டுத்திட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையிலான செயற்திட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் எடுத்து விளக்கினார்.

இதனிடையே மக்கள் எதிர்நோக்கிவரும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் தமது கவனத்திற்குத் தெரியப்படுத்தப்பட வேண்டுமெனவும் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் சுட்டிக் காட்டினார்.

இதன்போது தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலாதேவி சாந்தசீலன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பணிப்பாளர் ஜெயச்சந்திரன், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி இணைப்பாளர் சாள்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.



மாவடிச் சந்தி-வட்டுக்கோட்டையிலுள்ள அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி ஆலயத்தில் மகிந்தோதய திட்டத்தின் கீழ் மரம் நாட்டும் நிகழ்வில் ஆலய திருப்பணிச் சபை உப தலைவர் வேலுப்பிள்ளை மகேந்திரன் (வள்ளுவன் தோழர்) மரம் நாட்டுவதைக்காணலாம். (39)

## முரசின் இன்றைய பலன்

(01.02.2013 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 19 ஆம் திகதி.
நட்சத்திரம் அத்தம் மாலை 06.31 வரை. திதி பஞ்சமி
முற்பகல் 09.56 வரை. இராகுகாலம் 11.06 - 12.36 வரை.
சுபநேரம் 6.36 - 08.06 வரை. அமிர்தசித்தம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புத்துணர்வும் செயல்களில் ஆர்வமும். தேங்கிய பணிகளை முடிப்பீர்கள். தொழிலில், புதிய பரிமாணம். பணவரவு. பணச்செலவு. |
| ரிஷபம் | போட்டி இருக்கும். பிறர் வியப்புடன் பார்க்க செயல்படுவர்கள். பணவரவும் நன்மையும். சொத்து சேர்க்கை. சக ஊழியர் வகையில் சச்சரவு. |
| மிதுனம் | மனதில் குழப்பம். பிறரால் தொந்தரவு. நிதானத்தால் அவப்பெயர் தவிர்க்கலாம். பணியில் அதிக அக்கறை. வரவை விட செலவு கூடும். |
| கடகம் | அமைதி பரிமளிப்பு. தேங்கிய பணிகள் பூர்த்தி. தொழில் வளர்ச்சி. பணவரவு திருப்தி. குடும்பத் தேவை நிறைவு. உறவினர் வருகை. விருந்து. |
| சிம்மம் | முன்னர் செய்தவற்றின் நற்பலன் தேடி வரும். மனதில் புதிய நம்பிக்கை. தொழில் இடையூறு விலகும். அதிக ஆதாயம். உடல் பலம் பெறும். |
| கன்னி | நண்பர்களிடம் கலகலப்பு. புதிய அனுகூல வாய்ப்புகள. உபரி வருமானம். குடும்பத்தில் பாசமும், மகிழ்ச்சியும. புதிய பொருள் வாங்குவீர்கள்.பயண வாய்ப்பு. |
| துலாம் | முரண்கள் ஏற்படும். பேச்சைக் குறைப்பது நல்லது. தொழில் நிலையில் சிறுவீழ்ச்சி. நஷ்டம். இல்லறத் துணை உதவி. பழைய உறவு திடீர் வருகை. |
| விருச்சிகம் | விமர்சனங்கள் வரும். உங்கள் போக்கில் மாறுபடாமை நல்லது. கூடுதல் உழைப்பு. செலவு அதிகம் இருக்கும். வேலையிடத்தில் உளைச்சல். |
| தனுசு | சுய கௌரவ சிந்தனை. தொழிலில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகும். குறைந்த பணவரவு. குடும்பத்திற்கு கூடுதல் செலவு. மாமன், மைத்துனர் உதவி. |
| மகரம் | பெருமைப்படுவீர்கள். உதவியும் கிடைக்கும். தொழிலில் அதிக அக்கறை. உபரி பண வருமானம். உடல் நலம் பெறும். தேடிய பொருள் வந்து சேரும். |
| கும்பம் | பகை வரும். சிலரது குறுக்கீடுகளால் எரிச்சல். சமயோசிதம் வெற்றி தரும். தொழிலில் தடங்கல். சிக்கனம் தேவை. ஆதரவுக்கு ஏங்குவீர்கள். |
| மீனம் | தவறான ஆலோசனையால் குழப்பம். பயவுணர்வு உண்டாகும். சுயமான செயல்பாடு வெற்றி தரும். தொழில் வளர புதிய வாய்ப்பு. மருத்துவ சிகிச்சை. |

## பட்டப்படிப்பின் டிப்ளோமா பரீட்சை பெறுபேறுகள் அனுப்பி வைப்பு

(உடுவில்)

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்படிப்பின் டிப்ளோமா 2009 - 2010 கல்வி ஆண்டுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் தேசிய கல்வி நிறுவனத்தினால் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு வருட கற்கை நெறியாக அமைந்துள்ள இந்தக் கற்கை நெறியின் இரண்டு ஆண்டு பரீட்சை முடிவுகளும் ஒரேபெறுபேற்றுத் தாளில் உரிய பரீட்சார்த்திகளுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழ்கள் விரிவான, உத்தியோக பூர்வமற்ற ஒன்றாகும். விரிவான உத்தியோகசார்பான பெறுபேற்று சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பப் படிவம் ஒன்று உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தேசிய கல்வி நிர்வாகப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை வங்கியின் இல. 607628 என்ற கணக்கு இலக்கத்திற்கு 300 ரூபா கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டையும் அனுப்புவதன் ஊடாக விரைவாகப் பெறுபேற்றுச் சான்றிதழைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் விசேட கூட்டம் நாளை மறுதினம் ஞாயிறு காலை 9 மணிக்கு கே.எம். நிலாம் தலைமையில் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாப்புத் திருத்தம், தலைவர் தெரிவு, 2013 இற்கான ஒன்றுகூடல் சம்பந்தமான கலந்துரையாடல் இடம் பெறவிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (105)

## யாழ்.செயலகத்தில் கண்காணிப்பு கமரா

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தின் பிரிவுகளுக்கு கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக யாழ்.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்தின் பிரிவுகளின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் முகமாகவே இந்தக் கண்காணிப்புக்கமராக்கள் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்.அரச அதிபரின் அலுவலகத்தில் இருந்து ஏனைய பிரிவுகளைக் கண்காணிக்கும் விதத்தில் இந்தக் கண்காணிப்புக்கமராக்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்.செயலகத்தில் அரச அதிபரின் அலுவலகமும் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையிலும், இத்தகைய கண்காணிப்புக் கமராக்கள் ஏற்கனவே பொருத்தப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(பா)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிற்கிடையே GIZ, ESC நிறுவனங்களின் அனுசரணையுடன் நடாத்தப்படவிருந்த அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி தொடர்பான வினாடி – வினாப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களிற்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ்வைபவம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மானிப்பாயில் அமைந்துள்ள ஆசிரியவளநிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்வைபவத்தில் வரவேற்புரையினை ஆசிரிய வளநிலைய முகாமையாளர் ரி.சிவகுமாரன் நிகழ்த்தவுள்ளார். பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலயப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜ் கலந்து கொண்டு மாணவர்களிற்கு சான்றிதழ்களை வழங்கி வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.கந்தசாமியும் கலந்துகொள்ளவுள்ளார். நன்றியுரையினை வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கே.சிவகரன் ஆற்றவுள்ளார். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களையும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

## முழு நேர உறுப்பினராக ஹசான்

முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் தலைவர் ஹசான் திலகரட்ண இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவின் முழுநேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனம் விளையாட்டுத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வினால் வழங்கப்பட்டது. சனத் ஜயசூரிய தலைமையிலான புதிய கிரிக்கெட் தெரிவுக்குழு கடந்த திங்கட்கிழமை நியமிக்கப்பட்டது. இதன் முழுநேர உறுப்பினராக செயற்பட முடியாது எனத் தெரிவித்து ஹேமந்த விக்ரமரத்ன தனது பதவியில் இருந்து விலகினார். இதனையடுத்து காணப்பட்ட வெற்றிடத்திற்கே இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கட் வீரர் ஹசான் திலகரட்ண தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## மரதன் கொடுத்த மரணம்

(சிலாபம்)

மரதன் ஓடிக்கொண்டிருந்த மாணவி வடிகானில் விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று சிலாபத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிலாபம் ஆனந்த தேசிய பாடசாலையில் நடைபெறவிருக்கின்ற இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கௌசல்யா பவித்ராணி (வயது - 19) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வடிகானில் விழுந்த மாணவியை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போதிலும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## இந்திய அணியுடனான டெஸ்ட் அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு

(சிட்னி)

இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இந்த மாதம் முதல் மார்ச் வரை இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்ரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் 17 பேர் கொண்ட அணியில் 4 சுழற்பந்து வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். டோகர்ட்டி, நதன் லயன், மேக்ஸ்வெல், ஸ்டீவ் ஸமித் ஆகியோர் தேர்வாகி உள்ளனர். இதேபோல் அணியில் 5 வேகப்பந்து வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். சகலதுறை வீரர் ஹென்ரிக்சும் தேர்வாகி உள்ளனர

அணி விபரம் வருமாறு: கிளார்க் (கப்டன்), எட்கோவன், வோர்னர், ஹியூஸ், வட்சன், மேத்யூ, மேக்ஸ்வெல், மைக்கல் ஜோன்சன், பீற்றர் சிடில், ஸ்டார்க், நதன் லயன், ஹென்ரிக்ஸ், பேட்டின்சன், டோகர்ட்டி, ஜேக்சன் பேட், உஸ்பான் குவாஜா, ஸ்டீவ் ஸ்மித்.

## ஆணைக்குழு கலைப்பு



அமெரிக்க சைக்கிளோட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங்கின் ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்துவந்த சுயாதீன ஆணைக்குழுவை சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் கலைத்துள்ளது.

சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு நிறுவனத்துடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நம்பிக்கை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை உருவாக்க, சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளதாக சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் கூறியுள்ளது. சுயாதீன விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் நம்பிக்கைகொள்ளவில்லை என ஒன்றியத்தின் தலைவர் கூறியுள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் பல பாடசாலைகளில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்கபல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் மு. மகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

*

நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி. தர்மரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

*

கரணவாய், மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் கு. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

*

இதேவேளை, சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி முன்னிட்டு நடத்தப்படும் மரதன் ஓட்டப் போட்டி பாடசாலை அதிபர் நா. மகேந்திரராஜா தலைமையில் நாளை காலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

*

அல்வாய் வடக்கு றோ.க. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் அதிபர் எஸ். ஜெயதேவா தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தோவானந்தா கலந்துகொள்ளவுள்ளார்.

*

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரரேசன் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

*

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி கௌரி சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. நற்குணலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

*

கரவெட்டி தாமோதர வித்தியாலயத்தின் வருடந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி. குருகுலலிங்கம் தலைமையில் நடைபெற்றவுள்ளது. இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணித புள்ளி விபரவியல்துறை தலைவர் சி. ஸ்ரீசற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார். (18,109,10,03)

## மாற்றுங்கள் பயிற்சியாளரை



(சிட்னி)

அவுஸ்ரேலிய் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கே ஆர்தரை மாற்றி விட்டு நியூசிலாந்து முன்னாள் கப்டன் ஸ்டீபன் பிளமிங்கை பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார். ஸ்டீபன் பிளமிங் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டால் அவுஸ்ரேலிய கிரிக்கெட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நான் விளையாடும் காலத்தில் பார்த்ததில் எதிரணியின் சிறந்த கப்டன் ஸ்டீபன் பிளமிங். அமைதியானவரும், கிரிக்கெட் அறிவு மிக்கவருமான அவர் அணியை நன்றாக வழிநடத்துவார். தற்போதைய தேர்வு குழு முழு வேகத்தில் செயற்படவில்லை. தேர்வுக் குழுத் தலைவராக முன்னாள் விக்கெட் கீப்பர் ரோட் மார்சை நியமிக்க வேண்டும். அடுத்த 12 மாதங்கள் அவுஸ்ரேலிய கிரிக்கெட்டுக்கு மிகவும் முக்கியமான காலமாகும். அதற்காக புதிய திட்டங்களுடன் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானதாகும். இல்லையெனில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைக்கு எமது கிரிக்கெட் போய் விடும். சுழற்சி முறையில் வீரர்களை மாற்றும் திட்டம் சரியானது அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எனது இலக்கு வெற்றிக்குப் பங்கு

இந்திய அணிக்காக அதிகமான போட்டிகளில் வெற்றி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே எனது இலக்கு. அதற்காக என்னை தயார்படுத்தி வருகின்றேன் என விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

ஆரோக்கிய பானமான பூஸ்ட் நிறுவனத்தில் இந்திய அணி கப்டன் டோனி, டெண்டுல்கர், சேவாக் ஆகியோர் விளம்பர தூதுவர்களாக உள்ளனர். தற்போது அந்த வரிசையில் விராட் ஹோலியும் இணைந்து உள்ளார். பூஸ்ட் நிறுவனத்தில் அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான நிகழ்ச்சி சென்னையில் நடந்தது.

விராட் ஹோலியுடன் கப்டன் டோனி, சேவாக், இந்திய அணி முன்னாள் கப்டன் கும்ளே, முன்னாள் பயிற்சியாளர் ஜோன் ரைட் ஆகியோர் கலந்து கொண்டனர். பூஸ்ட் நட்சத்திர வரிசையில் நானும் இடம் பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. எனது திறமை மீது இரசிகர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை இது வெளிப்படுத்துகிறது. டோனி ஆடுகளத்தில் அமைதியாக நடந்து கொள்ளும் முறை என்னைக் கவர்ந்தது. நெருக்கடியான நேரத்தில் எப்படிச் செயற்பட வேண்டும் என்பதை அவரிடம் இருந்து கற்றுக்கொண்டேன்.



நான் சாதனையாளராக இருக்க விரும்புகிறேன். நான் இன்னும் சாதிக்க வேண்டியது உள்ளது. இந்திய அணிக்காக அதிகமான போட்டிகளில் வெற்றி பெற்றுக் கொடுப்பேன் என்று நம்புகிறேன். நெருக்கடி, சவால்கள் என்பது தவிர்க்க முடியாது. அதையும் தாண்டி சிறப்பாக ஆடுவது தான் வீரரின் செயற்படாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஹர்பஜன்சிங் புதிய அவதாரம்

(மும்பை)

இந்திய கிரிக்கெட் அணியில் இடம் கிடைக்காமல் தவித்து வரும் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங் திரைப் படத் தயாரிப்பாளராக அவதாரம் எடுக்கிறார். இது குறித்து ஹர்பஜன் சிங் கூறுகையில், ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் தனியாக ஏதாவது ஒரு தொழில் வைத்துள்ளனர். விளையாட்டைத் தவிர நல்லதொரு வியாபாரமும் அவசியம்தான். சினிமா ஒரு நல்ல தொழில். படம் எடுப்பது ஆத்ம திருப்தி தரும். அதை விட முக்கியமாக நிறையச் சம்பாதிக்கலாம். பஞ்சாபி சினிமா தற்போது ஆரோக்கியமாக உள்ளது. எனக்கும் அதுதான் சரியாக வரும். எனவே பஞ்சாபி மொழி யில் படம் தயாரிக்க ஆர்வமாக உள்ளேன். கவர்ச்சிகரமான தொழிலாகவும் இது எனக்குத் தெரிகிறது. முதலில் 2 படங்கள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளேன். இருப்பினும் கிரிக்கெட்டை முழுமையாக விட்டு விட மாட்டேன். அதேபோல பொலிவுட்டிலும் சில நடிகர்களுடன் பேசிவருகிறேன். 2 படங்களுக்கான இயக்குநர்களை முடிவு செய்து விட்டேன். விரைவில் படத் தயாரிப்பு குறித்த விபரம் வெளியிடுவேன். இரு படங்களும் கொமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும். இரசிகர்கள் இதை இரசிப்பார்கள். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இப்படங்கள் திரையிடப்படும். படத் தயாரிப்போடு சரி, நான் நடிக்க மாட்டேன். கண்டிப்பாக இதை நம்பலாம்.

## 7 மாதங்களின் பின் மீண்டும் களத்தில்



காயத்தினால் அவதிப்பட்ட முன்னணி ரென்னிஸ் வீரர் நடால் ஏழு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் களமிறங்கவுள்ளார். ஸ்பெயின் முன்னணி ரென்னிஸ் வீரர் 26 வயதான ரபெல் நடால், கடந்த ஜூன் மாதம் விம்பிள்டன் ரென்னிஸ் 2ஆவது சுற்றில் தோல்வி அடைந்த பின்னர் இதுவரை எந்தப் போட்டிகளிலும் பங்கேற்கவில்லை. இடதுகால் முட்டிக் காயத்தால் பாதிக்கப்பட்ட அவர், கடந்த ஆண்டு இறுதியில் களம் திரும்பத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அந்தச் சமயத்தில் அவருக்கு வயிற்றுப் பிரச்சினை ஏற்பட்டதால் அவர் களம் திரும்புவது தாமதம் ஆனது. இந்த நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர் வரும் 4ஆம் திகதி சிலியில் தொடங்கும் சர்வதேச ரென்னிஸ் போட்டியில் பங்கேற்க உள்ளார். அதைத் தொடர்ந்து பிரேசில் ஓபன் (பெப்.11), மெக்சிக்கோ ஓப்பன் (பெப்.25) ஆகிய போட்டிகளிலும் பங்கேற்க உள்ளார். தனது சொந்த ஊரான மஜோர்காவில் நேற்று முன்தினம் பயிற்சி மேற்கொண்ட அவர், நிருபர்களிடம் கூறுகையில், 7 மாதங்களுக்கு பின்னர் நான் மீண்டும் ரென்னிஸ் விளையாடப் போகிறேன். ஆனால் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் களம் இறங்குவதால், எனது கால்முட்டி எந்தளவுக்கு ஒத்துழைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த மூன்று போட்டித் தொடர்களிலும் நான் தொடர்ந்து விளையாடினேன் என்றால், சரியான முறையில் தயாராகியிருக்கிறேன் என்று கருதுவேன். நல்ல முடிவை (வெற்றி) எட்டுவதில், எனக்கு இந்த மூன்று போட்டிகளும் கடினமாக இருக்கும் என்பதை அறிவேன். ஆனால் என்னால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் வெளிப்படுத்துவேன் எனத் தெரிவித்தார்.






தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீர,வீராங்கனைகளின் மரதன் ஓட்டப் போட்டி கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. இம்மரதன் ஓட்டப் போட்டி கல்லூரி முன்றலில் ஆரம்பமாகி, அதன் முன்றலிலேயே நிறைவடைந்தது. இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ம. தர்ஜன், இரண்டாமிடத்தை ம.ஜனன், மூன்றாமிடத்தை நிரோஜன் ஆகியோர் பிடித்துக்கொண்டனர். பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பா. சானு, இரண்டாமிடத்தை ம. ஜன்சிகா, மூன்றாமிடத்தை சரண்யா ஆகியோர் பிடித்துக்கொண்டனர். இப்போட்டிக்கான அனுசரணையை லண்டனிலுள்ள கல்லூரியின் பழைய மாணவன் செந்தில்வாசன் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இதில் வீராங்கனைகள் ஓடுவதையும், முதல் மூன்று இடங்களைப் பிடித்த வீராங்கனைகள் கல்லூரி அதிபருடன் நிற்பதையும் காணலாம். (93)

விளையாட்டுச் செய்திகள்

# பிரதேச மட்ட கால்பந்து

## நெடுந்தீவு சென். ஜோன்ஸ் சம்பியன்



(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் சென். ஜோன்ஸ் அணி சம்பியனாகியது.

நெடுந்தீவுப் பிரதேச வருடாந்த விளை யாட்டு விழாவை முன்னிட்டு, பதிவு செய்யப் பட்ட அணிகளுக்கிடையிலான பெரு விளையாட் டுப்போட்டிகள் தற்போது நடத்தப்பட்டு வரு கின்றது. இதில் கடந்த 27ஆம் திகதி நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சென். ஜோன்ஸ் அணியும், சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் சிறப்பாக ஆடிய சென். ஜோன்ஸ் அணி 2-0 என்ற கோல் கணக் கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரை யிறுதிப் போட்டியில் ஐக்கியதீப அணி யும், வளர்மதி அணியும் மோதின. இரு அணி களுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதையும் அடிக்க முடியவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி - தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வளர்மதி அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இறுதிப்போட்டியில் சென்.ஜோன்ஸ் அணியும், வளர்மதி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடை பெற்ற இப்போட்டியில் சென்.ஜோன்ஸ்அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியனாகியது. இப்போட்டி நிகழ்வில்,விளை யாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு ஆர்வலர் கள், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த வீரர்கள், இரசிகர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (93)

## இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் லீக் அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று இன்றைய தினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாண லீக் அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட லீக் அணி மோதவுள்ளது. (எஸ்.பி.)

***

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் விமலன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில், பிரதம விருந்தினராக ஒலிம்பிக் பதக்கம் வென்ற எதிர்வீரசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

## அரியாலை ஐக்கியம் சம்பியன்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் அரியாலை ஐக்கிய அணி முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

நல்லூர் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட அணி களுக்கிடையில் நடத்தப்பட்ட இக்கரப்பந்தாட்டப் போட்டிகடந்த 27ஆம் திகதி கொண்டலடி ராஜாவிளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

மூன்று செட்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய அணியும், மீகநீண்ட இடைவெளிக் குப் பின்னர் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட மணியந் தோட்டப்பகுதியைச் சேர்ந்த மணியம்தோட்டம் ஐக்கியம் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அரியாலை ஐக்கியம் அணி 25-22, 25-21 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று முதலாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் மணியம்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அதிகளவிலான இரசிகர்கள் கலந்துகொண்டு தமது அணி வீரர்களுக்கு உற்சாகமூட்டியமை குறிப் பிடத்தக்கது.

ஒரு நாட்டில் ஆட்சி மாற்றம் நிகழ வேண்டும் என்ற கோரிக்கை அந்த நாட்டு மக்களிடமிருந்துதான் முதலில் வரவேண்டும். கட்சி

மாற்றத்தை மக்கள் ஏற்படுத்துவார்கள்.

இலங்கையிலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் வெளியாகும் பெரும்பாலான தமிழ், ஆங்கில தினசரி மற்றும் வாராந்த, மாதாந்த பத்திரிகைகளிலிருந்து இணையத்தளங்கள்வரை இன்றுள்ள இலங்கை அரசை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டை எப்படியாவது அகற்றி ஐக்கிய தேசியக்கட்சியை மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற்ற வேண்டுமென்ற நோக்கங் கொண்டுள்ள அந்நிய சக்திகளின் நேரடி, மறைமுக ஆதரவும் இந்த ஊடகங்களுக்கு உண்டு.

ஆனால் தென்னிலங்கையை தளமாகக் கொண்ட நடுநிலை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இலங்கையில் ஆட்சி மாற்றம் நடாத்தப்பட்டதால் 2016 ஆம் ஆண்டிலேயே அடுத்த ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே ஜனநாயக ரீதியாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு குறைந்தது இன்னமும் 3 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இந்த நீண்ட 3 ஆண்டுகள்வரை காத்திருந்தும் தேர்தல் பலப்பரீட்சையில் மீது போர்க்குற்றம் சுமத்தி சர்வதேச விசாரணை வேண்டுமென்று பிரசாரம் செய்து திரிகிறார்கள். புலிகளைத் தோற்கடித்த பின்னரும் தமிழர்கள் இனரீதியான ஒடுக்கு முறைக்கு உள்ளாகிறார்கள், மக்களின் நிலங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது போன்ற பிரசாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

- வானவில் 24 இதழிலிருந்து.

# ஆட்சி மாற்றத்தை வேண்டும் தமிழ் தேசியவாதிகள்



சார்பற்ற நடுநிலை ஊடகங்கள் என்று சொல்லிக்கொள்பவை ஆட்சியாளர்கள் பற்றிய மக்களின் அதிருப்தியான எண்ணங்களைப் பிரதிபலிக்கலாம். முதலாளித்துவ ஜனநாயக அமைப்பைக் கொண்டுள்ள நாடுகளில் தேர்தல் மூலம் காலத்துக்குக் காலம் ஆட்சி

பகிரங்கமாக முன்னிறுத்தியே செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இந்த ஊடகங்கள் எப்போதுமே தீவிர தமிழ் தேசியவாத நிலைப்பாடும் கொண்டவைகள். தற்போது அதிகாரத்திலுள்ள ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பை

நிகழக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவோ அல்லது ஆட்சி மாற்றம் நிகழ வேண்டுமென்ற அடிப்படையிலோ செய்திகளை வெளியிடுவதில்லை. ஏனெனில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு தென்னிலங்கை மக்களின் உறுதியான ஆதரவினை இந்த ஊடகங்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளன.


இலங்கை நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையையும் நாடாளுமன்ற ஆட்சி முறையையும் இணைத்த அரசியலமைப்பை கொண்ட ஒரு நாடு. தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை சேர்ந்த ஒருவரே ஜனாதிபதியாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடமே நாடாளுமன்ற பெரும்பான்மையும் உள்ளது. கடைசியாக இலங்கையில் 2010 இல் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் இப்போது ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களை வெல்ல முடியாது என்று நம்புபவர்களே இலங்கையில் ஆட்சி மாற்றத்திற்கு முன்னின்று வேலை செய்கிறார்கள். இலங்கையில் இன்று ஐக்கிய தேசியக்கட்சி ஒரு பலமான கட்சியாக இல்லாதிருப்பதும் தேர்தலில் மக்களை வசீகரிக்கக்கூடிய தலைவர்களென எவருமே இல்லையென்பதாலுமே, இவர்கள் தேர்தல் மூலமான ஆட்சிமாற்றத்தில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறார்கள்.

தற்போது ஆட்சியிலுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமையிலான அரசு 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி புலிகளை முற்று முழுதாக தோற்கடித்ததே, தற்போதைய அரசுக்கும் தமிழ் தேசியவாதிகளுக்கு மிடையிலான பிணக்கு.

இதனால்தான் இந்த அரசு இந்த பிரசாரங்களில் உண்மைகள் இருப்பினும், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நிலைமைகளில் மாற்றம் எதுவும் உடனடியாக ஏற்படாது.

வடக்குக் கிழக்கு அன்றாட பாதுகாப்பு கடமைகளிலும் சிவில் நிர்வாகங்களிலும் இராணுவ பிரசன்னம் இருக்கின்றது. யுத்தம் முடிந்து மூன்றரை வருடங்களே ஆகியிருப்பதால், இராணுவத்தின் தலையீடு தவிர்க்க முடியாதென அரசு நீண்ட காலம் கூறிக்கொண்டிருக்க முடியாது. மேலும் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதியையும் நாடாளுமன்ற பெரும்பான்மையையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு கொண்டிருப்பதால், இலங்கையில் தாங்கள் நினைத்ததை எதையும் செய்யலாம் என்ற எண்ணமும் தற்போதைய அரசுக்கு இருக்கக்கூடாது.

## ஜேர்மனியின் மரத் திருடர்கள்



ஜேர்மனியர் பொதுவாகச் சிக்கனமாகவும், மிகவும் ஜாக்கிரதையாகவும் வாழ்க்கை நடத்துபவர்கள் என்று பொதுக் கருத்து உலகெங்கும் நிலவுகிறது. சட்டம் ஒழுங்கு போன்றனவற்றையும் ஜேர்மனியர் அதிகம் கறாராகக் கடைப்பிடிப்பவர்கள் என்று ஒரு அபிப்பிராயம் பொதுவில் உண்டு. இது அத்தனை சரியானதல்ல என்பது அங்கு நிறைய பயணம் போனவர்கள் அல்லது வசிப்பவர்களுக்குத் தெரிந்திருக்கும். பாஸ்பைண்டரின் படங்களை வைத்து ஜேர்மனி பற்றி ஒரு முடிவுக்கு வர முடியாது என்றாலும், கொஞ்சம் நேரடி அனுபவத்தில் ஜேர்மனியும் இதர மனித சமுதாயங்களின் பிறழ்வுகளிலிருந்து தப்பவில்லை என்பது நமக்குத் தெரியும். கிழக்கு ஜேர்மனி பெரும் ஊழல் சாம்ராஜ்யம் என்று சமீபத்தில் ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது. முன்னாள் மேற்கு ஜேர்மனியில் வணிகம் சார்ந்த ஊழல் ஏராளம்.

இருந்தாலும், சிலருடைய அதிர்ஷ்டம் என்னவென்றால், அவர்கள் என்ன தவறு செய்தாலும் பழி அவர்கள் மேல் ஒட்டாது. இங்கு பலர், எந்தக் களங்கத்தையும் பொருட்படுத்தாது தேர்தலில் நிற்பதும், மக்கள் பெரும் திரளாக வந்து அவர்களை ஆதரிப்பதும் இதற்கு வலுவான சான்றுகள். அடுத்தாற்போல, சில சமூகக் குழுக்களுக்கு அதிகாரத்திலிருந்து என்ன ஒதுங்கி இருந்தாலும் பழி தொடர்ந்து சுமத்தப்படும் நிலை தொடரும். அதையும் எளிதில் விளக்கி விட முடியாது.

இப்படித்தான், ஜேர்மனியருக்கு ஒழுங்கு, நேர்த்தி, கறாரான நடத்தை, நேரம் தவறாமை போன்ற குணாதிசயங்கள் ஆழ ஊறிய சமூகப் பழக்கவழக்கங்கள் என்பதாகவும், ஒப்பீட்டில் தெற்கு ஐரோப்பியர் எதற்கும் நம்பமுடியாத படிக்கு ஊழல் பெருச்சாளிகள் என்றும் உலக அபிப்பிராயம் நிலவுகிறது. அது மட்டுமல்ல, ஜேர்மனியரே இப்படித்தான் கருதுகிறார்கள். தெற்கு ஐரோப்பியர் என்கையில் ஸ்பெயின், போர்த்துக்கல், இத்தாலி போன்ற நாடுகளைக் குறிக்கிறோம். பொதுவாகச் சொன்னால், கொஞ்சம் பழுப்புத் தோல், கறுப்பு முடி இருந்தாலே அழுக்கு, ஊழல், பொய்மை போன்றன அம்மனிதர்களின் குணாதிசயங்களாக இருக்கும் என்பது வெள்ளைத் தோல், மஞ்சள் வெள்ளை (blond) முடி கொண்ட ஐரோப்பியரின் மனச்சாய்வு.

இத்தனைக்கு நடுவில், சமீபத்தில் ஐரோப்பாவில் பெரும் பொருளாதாரச் சரிவு நேரவும், கிரீஸ், இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் பொருளாதாரங்கள் பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்றன. ஸ்பெயின், கிரீஸ் போன்ற நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் சுமார் கால்வாசி இளைஞர்களைப் பீடித்திருக்கிறது. அதாவது 25% வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கின்றனர். ஜேர்மனியிலோ பொருளாதாரம் உச்ச கதியில் இயங்குகிறது. கடந்த இரு வருடங்களில் நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள் சுதாரித்து மறுபடி மேலெழுந்து விட்டன. இருந்தும் ஜேர்மனியிலும் உலகப் போக்காகி விட்ட எரிபொருள் விலை உயர்வு என்பதற்குத் தாக்கம் இருக்கிறது.

இதனால் ஜேர்மனியர் அங்கு நிலவுகிற கடுங்குளிருக்கு எதிராக வீட்டை உஷ்ணப்படுத்த விறகுகளைப் பயன்படுத்தத் தொடங்கி இருக்கின்றனராம். இந்த விறகுக் கட்டைகளை அவர்கள் நிறைய ஜேர்மன் காடுகளிலிருந்து திருடுவதாக ஜேர்மனியின் மாநில அரசுகள் இப்போது குறை சொல்லத் தொடங்கி இருக்கின்றன. சில ஜேர்மன் வனப்பிரதேச நிர்வாகிகள் மரங்களைத் திருடுவோரைப் பிடிக்கும் நிமித்தமாக மரங்களில் சுகுஜனு எனப்படும் கருவிகளைப் புதைக்கின்றனராம். இவை மரங்கள் எங்கிருந்தாலும், தேடினால் தாம் இருக்கும் இடத்தை ஒலி பரப்பிக் காட்டிக் கொடுத்து விடும். சட்டம், ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் ஜேர்மனியர், "பஞ்சம் வந்தால் பத்தும் பறந்து போம்" என்ற பழமொழியை நிரூபிக்கின்றனரா?

## தெரியுமா?

- கடுகடுத்த முகமா? 34 தசைகள் அப்போது இயங்க வேண்டும். புன்னகைக்கும்போதோ 13 தசைகள் மட்டுமே இயங்குகின்றன. அது மட்டுமல்ல, தசைகளின் விறைப்பும் தளர்கிறது.
- பாப்பா என்ற லத்தீன் சொல்லுக்கு "குரு" என்று பெயர். அப்படித்தான் போப் (POPE) என் பெயர் வந்தது.
- "ஸ்பீட் மணி" (Speed money) எனப்படுவது இலஞ்சத்தின் நவீன பெயர்.
- இரட்டைக் குழந்தைகள் அதில் ஒன்று ஆண், மற்றொன்று பெண்ணாகப் பிறந்தால் அதற்குப் பெயர் Pigeon Pair. அதாவது, புறா ஜோடி என்று பெயர்.



- ஜப்பானிய மொழியில் உழைப்பு என்ற அர்த்தத்தைத் தொனிக்க கூடியச் சொற்கள் நிறைய உள்ளன. ஆனால் ஓய்வு என்ற வார்த்தையைக் குறிக்கும் சொல் அம்மொழியில் இல்லை.
- ஏலக்காய் செடி 40 ஆண்டுகள் வரை பலன் தரும்.
- தொலைக்காட்சி பார்த்து பெரும்பாலான நேரத்தை கழிப்பது எல்லா நாடுகளிலுமே பெருகி வருகிறது. மக்கள் டி.வி.யிலே மூழ்கிவிடாமலிருக்க ஐஸ்லாந்து நாடு வியாழக்கிழமை தோறும் டி.வி.க்கு விடுமுறை அளிக்கிறது. அன்றைய நாளில் எந்த நாட்டு சனல்களையும் மக்கள் பார்க்க முடியாது.
- திரைப்படங்களுக்கு தணிக்கை இல்லாத நாடு பிரான்ஸ்.

1

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

இந்தப் பட்டியல் எனது தனிப்பட்ட இரசனை சார்ந்து நான் தேர்ந்தவை. மேலும் 21ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டில் எழுந்து வந்த இவர்கள், உலக சினிமாவின் திசையையும்; போக்கையும் மாற்றியமைத் தார்கள் என்று நான் நினைக்கிறேன். பன்னாட்டு இளம் இயக்குனர்களின் மேல் பாதிப்பை ஏற்படுத்தி, உலக கவனமும் பெற்றவர்கள் இவர்கள்.

இந்த இயக்குனர்களில் சிலர் 90களின் பிற்பாதியி லேயே சினிமாவுக்குள் நுழைந்துவிட்டார்கள் என்றபோதிலும் 2000இற்குப் பிறகே தங்களின் மிக முக்கியமான படங்களை எடுத்து பரவலான கவனிப்பையும் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். ஒருவேளை கடந்த பத்தாண்டுகளின் மிகச் சிறந்த படங்களென்று நான் நினைப்பவைகளின் பட்டியலைப் போட்டால் அதில் இந்தப் பட்டியலில் இருக்கும் இயக்குனர்கள் சிலரின் படங்களே கூட இடம்பெறாமல் போயிருக்கக் கூடும்.

ஆக 2000த்திலிருந்து 2009 வரையான ஆண்டுகளுக்குள் புதிதாக எழுந்துவந்த இயக்குனர்களில், முக்கியமானவர்களாக நான் நினைப்பவர்களின் பட்டியல் மட்டுமே இது.

## கிறிஸ்டோபர் நோலன்

இங்கிலாந்தைத் தாயகமாகக் கொண்ட இயக்குனர் கிறிஸ்டோபர் நோலன், 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முளைத்தெழுந்து, பத்தாண்டு களில் மாபெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கிறார். 2000இல் வெளிவந்த "மெமண்டோ" திரைப்படம், புதிர்த் தன்மை, நேர்கோடற்ற கதைசொல்லல் மற்றும் பின்னால் நகரும் காலவோட்டத்தில் காட்சிகளை வரிசைப்படுத்துவது போன்ற யுத்திகளின் காரணமாகவே உலகம் முழுவதின் கவனத்தையும் ஈர்த்தது. "குறுகியகால ஞாபக மறதி" நோயுள்ள கதாநாயகனின் கோணத்திலிருந்து காட்சிகளைப் புரிந்துகொள்வதற்குப் பின்னகரும் கால யுத்தி மிகச் சிறப்பாகப் பொருந்தியிருந்தது. கதையிலிருந்த முடிச்சுக்களும்,




படத்தின் முடிவும், இளைஞர்கள் மத்தியில் பெரும் விவாதங்களை உருவாக்கியது. அவற்றைப் புரிந்துகொள்வதற்காக அவர்கள் மீண்டும் மீண்டும் படத்தைப் பார்த்தார்கள். அதற்கு முன்பு ஸ்டான்லி க்யுப்ரிக் படங்களுக்கு மட்டுமே இது நடந்திருக்கிறது. நோலன் மிகப்பெரிய ஸ்டான்லி க்யுப்ரிக் இரசிகர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாயகனின் மறதி நோய், முக்கிய தகவல்களை அவன் உடலில் பச்சை குத்திக்கொள்வது, பொலரொய்ட் புகைப்படங் களாக எடுத்துவைத்துக்கொள் வது போன்றவற்றைத் தவிர்த்து, கஜினி படத்துக்கும் இதற்கும் பெரிய சம்பந்த மில்லை. "மெமண்டோ" நாயகன், தான் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வேலைபார்த்த போது சந்தித்த "சாம்மி" என்கிற ஒரு "குறுகியகால ஞாபக மறதி" நோயாளியைப் பற்றிச் சொல்வது, உண்மை யில் நாயகனின் சொந்த வாழ்க்கையில் நடந்ததுதான், அது வேறு யாருக்கோ நடந்ததாக அவன் மனம் மாற்றிக்கொண்டி ருக்கிறது. தனது மனைவியைக் கொன்றவனைப் பழிதீர்ப்பதாக நினைத்து அவன் ஏற்கனவே சில கொலைகளைச் செய்துவிட்டான், அவற்றை நோயின் காரணமாக மறந்துவிட்டு இப்போதும் தேடிக்கொண்டி ருக்கிறான். தனது விநோத நோயின் காரணமாக தான் ஒரு சக்கை போல மாறிவிடாமல், வாழ்வை இலட்சியமுள்ளதாகவும், நொடிக்கு நொடி பரபரப்பான தேடல் உள்ளதாகவும் ஆக்கிக்கொள்வதற்காக, அவன் தெரிந்தே தவறான



தகவல்களை உடலில் பச்சை குத்திக்கொள்கிறான் என்பதுதான் படத்தின் இறுதிக் காட்சி.

நோலன் அடுத்ததாக இயக்கியது ஒரு ஐரோப்பிய படத்தின் ரீமேக், இன்சோம்னியா. தூக்கமின்மை நோயால் அவதியுறும் பொலிஸ்காரராக "அல் பாசினோ" நடித்த அந்தப் படத்தின் மூலமே ஹொலிவுட்டின் பெரும் முதலீட்டு மைய ஓட்டத்தில் இணைந்தார் நோலன். அவர் இயக்கிய இரு பேட்மேன் படங்களும், கொமிக்ஸ் நாயகர்களை மையமாகக் கொண்டு இதுவரை எடுக்கப் பட்ட எந்தப் படத்தை விடவும் மேலானதாகக் கருதப்படுகின் றன. தீவிர சினிமாவாகவே அவற்றை உருவாக்கியிருக் கிறார். அதிலும் "தி டார்க் நைற்" ஒரு அற்புதம்.

இதுவரையிலான ஆகச் சிறந்த வில்லன் கதாபாத்திரங்களில் ஒன்று இதில் வரும் "ஜோக்கர்" பாத்திரம். பணம் காமம் போன்ற எந்த உலக இன்பங்களையும் நாடாதவன். பெருங்குழப்பங்களை உண்டாக்கி சமூக அமைப்பைச் சிதைப்பதையும், சமூகத்தின் அறவுணர்ச்சியுள்ள ஆன் மாவைக் கொல்வதையுமே லட்சியமாகக் கொண்ட வில்லன். மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் ஒருவனைக் கீழ்மைக்குத் தள்ளு வதன் மூலம் சமூகத் தில் ஒழுங்கின்மையை உருவாக்க நினைப்பதும், சராசரி மனிதர்களின் மன அழுக்குகளை முழுக்கப் புரிந்து கொண்ட ஒரு அறிவுஜீவி யாகப் பேசுவதும் மிரட்சியானது. வழக்கமாக சூப்பர் ஹீரோக்கள் இறுதியில் தங்கள் மீது சுமத்தப்பட்ட பழியைக் களைந்து மக்கள் முன் போற்றுதலுக்கு உரியவர்களாக நிற்பார்கள். ஆனால் இதில் எதிர்மறை யாக, இறுதியில் பேட்மேன் தானே பழியை ஏற்றுக் கொண்டு ஓடி ஒளிகிறான். தான் ஒருவன் களங்கப்படு வதன் மூலம், சமூக ஒழுங் கும், மக்களின் நம்பிக்கை யும் நீடிக்குமென்றால், அதுவே சிறந்தது என்கிறான்.

நோலனின் ஆகச் சிறந்த படங்கள் என்று நான் நினைப்பவை, 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த இரு மேஜிக் நிபுணர்களின் தீவிர போட்டியை மையமாகக் கொண்ட "தி பிரஸ்டீஜ்" மற்றும் கனவுக்குள் கொள்ளையடிப்பது இன் னொருவரின் ஆழ்மனதில் ஒரு கருத்தை விதைப் பது பற்றிய "இன்செப்ஷன்".

(தொடரும்)

# கல்கி பெயரின் கதை



பாமரனுக்கும் உரைநடை புரிய வேண்டு மென்று எழுதியவர் கல்கி. இந்த இடத்தில் கல்கி என்ற பெயர் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர் தன் ஆசான் என்று வகுத்துக்கொண்ட திரு. வி.கல்யாணசுந்தரம் அவர்களின் பெயரின் முதல் இரண்டு எழுத்துக்களுடன் கிருஷ்ணமூர்த்தி என்ற தன் பெயரின் முதல் எழுத்தைச் சேர்த்து "கல்கி" என்று வைத்துக் கொண்டார் என்று சொல்வார்கள். குருபக்தி காரண- மாக கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதை மறுக்கவில்லை என்றபோதும், வேறோரிடத்தில் தனது புனைபெயருக்கான காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத்தைப்பற்றிய கனவும்; உணர்வும்; அக்கறையும் அதிகம் இருந்த காரணத்தால் தனக்குக் "கல்கி" என்று புனைபெயர் சூட்டிக்கொண்டதாகக்கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் சொன்னதாவது: "இதுவரை கழிந்து போன யுகங்களைத்தவிர்த்து புதிய யுகத்தை சிருஷ்டிக்கப்போவதாக ஒவ்வோர் இளம் எழுத்தாளரும் எண்ணிக்கொண்டு எழுதுவது இயற்கை. அதுபோலவே நானும் அந்தக் காலத்தில் ஒரு புது யுகத்தை சிருஷ்டிக்கப் போகும் ஒரு வீரனாக என்னை நினைத்துக் கொண்டு கிருஷ்ணனின் பத்தாவது அவதாரமும், புது யுகத்தைக் குறிப்பதுமான "கல்கி" என்ற புனைபெயரை அப்போது வைத்துக்கொண்டேன்" என்றார்.

('சில சிந்தனைகள் சில நினைவுகள்' நூலில் நல்லி குப்புசாமி செட்டியார்)

✦ கடலில் ஆழமான பகுதிகளிலும், ஆழமற்ற பகுதிகளிலும் வசிக்கும்.

✦ 3 ஆயிரத்து 175 கிலோக் கிராம் எடை வரை வளரும்.


✦ முன்னோக்கி மட்டுமே நீந்த முடியும்.


✦ சுவாசிப்பதற்காக அசைந்து கொண்டே இருப்பதால் சுறாக்கள் தூங்குவதில்லை.

✦ சுறா மீன்களின் நீச்சல் வேகம் மணிக்கு 156 கிலோமீற்றர்கள்.

✦ சுறா மீனின் கூடு உறுதியான சவ்வுத் தசைகளால் ஆனது. அதில் எலும்புகள் கிடையாது.

✦ சுறாக்களின் ஆயுட்காலம் சராசரியாக 70ஆண்டுகள்.



## பெரிய அறுவை சிகிச்சை

அமெரிக்காவில் 90 கிலோ எடை யுள்ள கருப்பைக் கட்டி ஒன்று 30 வய துப் பெண்மணியின் வயிற்றில் இருந்து கலிபோர்னிய பல்கலைக்கழக மருத்து வர்களால் அகற்றப்பட்டது. மருத்துவர்கள் கொண்ட குழுவால் 1978ஆம் ஆண்டு மே மாதம் நடத்தப்பட்ட இந்த அறுவை சிகிச்சையில் வெளியேற்றப்பட்ட கட்டி 74 லீற்றர் நீராக உடைந்து வெளியே றிய பின்னும் 18 கிலோ எடையுள்ள சதைப் பிண்டமாக இருந்தது. அறுவை சிகிச்சைக்கு முன் அந்த பெண்ணின் எடை எவ்வளவு தெரியுமா? 172 கிலோ.

வாரம் ஒரு பாடசாலை



# யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்

## எமது பாடசாலை வரலாறு

நாவலர் பெருமான் ஏற்படுத்திய மறுமலர்ச்சி இயக்கத்தால் கவரப்பட்ட சைவப் பெரியார்கள், தெல்லிப்பளைச் சூழலிலும் அயலிலும் 1816 இல் அமெரிக்கன் திருச் சபையினர் பாடசாலைகள் அமைக்க, எமது சைவப் பிள்ளைகள், சைவச்சூழலில் கல்வி கற்க வேண்டுமென்ற பெருநோக்குடன் பாடசாலைகளை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டனர். இப் பாடசாலைகள் "போட்டிப் பாடசாலைகள்" எனப்பட்டன. இத்தகையோரில் வீமன்காமத்துக் குருநாத உடையார் மகன் சின்னத்தம்பி உடையாரும் ஒருவராவர். இவர் 1891 ஆம் ஆண்டு வீமன்காமம் "டச்" வீதியில் 15 மாணவருடன் "சுப்பிரமணிய வரோதய வித்தியாசாலை" என்னும் பெயர்கொண்ட பாடசாலையை நிறுவினார்.

1894 இல் சின்னத்தம்பி உடையார் மறைந்தபின் மனைவி அன்னப்பிள்ளையின் அரவணைப்பில் பாடசாலை இயங்கியது. இவர்களது மகன் சட்டத்தரணி சுப்பிரமணியம் அவர்கள் இப்பாடசாலை கிராமத்து ஒரு கோடியில் வசதிகளற்று காணப்படுவதை மனதில் கொண்டு, போக்குவரத்து வசதியும் குடிநீர் வசதியும், திண்ணைப் பள்ளிப் பாரம்பரியமும் சைவ மணம் வீசும் இடமாகவும் திகழும் மாவிட்டபுரமே பாடசாலைக்கு உகந்த இடம் எனக் கருதி முருகன் ஆலயத்தின் முன் கிழக்குப் புறமாகக் காணிகளை வாங்கினார். கட்டடங்களை அமைக்க ஊர்மக்களும் உற்சாகம் கொடுத்து, ஊர்ப்பாடசாலையாகக் கருதி "வீமன்காமம் தமிழ்க் கலவன் பாடசாலை" எனப் பெயர் சூட்டினர். இது 23 ஆம் திகதி யூலை மாதம் 1935 ஆம் ஆண்டு இப் புது இடத்தில் அமைக்கப்பட்டது. 01.09.1936 இல் இப்பாடசாலை வீமன்காமம் இருமொழிப்பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

1944இல் திரு.சுப்பிரமணியம் அவர்களின் மூத்தமகன் அம்பிகாபதியும் இரண்டாவது மகன் கலாநிதி சு.வித்தியானந்தன் (துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களும் முகாமையாளராகக் கடமையாற்றினர். திரு.ஏ.இரத்தினவரதர் அதிபர் அவர்களது அயராத உழைப்பின் பரிசாக இப்பாடசாலை 1951இல் "வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலை" ஆகியது. இதே ஆண்டு பொன் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது கனிஷ்ட பிரிவு பண்டிதர் இ.நமசிவாயம் அவர்களின் மேற்பார்வையில்



பாடசாலை ஆசிரியர் குழாம்

மிளிர்ந்தது. 1962இல் இப்பாடசாலை அரசின் உடைமையாக்கப்பட்டது. 1954இல் அதிபராகக் கடமை ஏற்ற சுப்பிரமணியம் அவர்களின் மூத்த மகள் கலாவல்லி ஆறுமுக தாசன் அவர்கள் முகாமையாளரின் உதவியுடன் உயிரியல் ஆய்வு கூடமும் நிறுவினார். பாடசாலை விட்டு விலகிய மாணவர்களுக்கு நெசவு, கயிறுபின்னல் போன்ற சிறு கைத்தொழில், கல்வியூட்டல் வசதிகளும் செய்யப்பட்டன. இத்தகைய வளர்ச்சிகளைக் கண்ணுற்ற கல்வித்திணைக்களம் 1967இல் இப்பாடசாலையை "வீமன்காமம் மகா வித்தியாலயம்" என தரமுயர்த்தியது. மயிலணி க.திருநாவுக்கரசு அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அவ்வூர் வள்ளல் ஆ. சம்பந்தர் உதவியுடன் குழாய்நீர் வசதி, மின்வசதி, கட்டடவசதிகளை ஏற்படுத்தினார். திரு. மு. சிவராசரத்தினம் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தமிழர் பண்பாட்டு உடைஅணிந்த மாணவர்களை சீருடை அணியும் சிறப்பை நடைமுறைப்படுத்தினார்.

## எமது பாடசாலை மீள்குடியேற்றத்தின் பின் 2012.01.02

எமது பாடசாலை 1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து சென்று சிறிது காலம் யா/சதானந்த வித்தியாசாலை அளவெட்டியில் இயங்கியது. பின்னர் அங்கிருந்தும் இடம் பெயர்ந்து சென்று யா/இராமநாதன் கல்லூரியில் இயங்கியது. 21வருட இடப்பெயர்வின்பின், மீண்டும் 2012.01.02 இல் தனது சொந்த இடத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. பாடசாலையின் பழைய கட்டடங்களில் பெரும்பாலானவை அழிவடைந்த நிலையில், சேதங்களுடன் மேல்மாடிக்கட்டடம் ஒன்றும், ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் மூன்றுமே எஞ்சியிருந்தன. இந்நிலையில் பாடசாலையை மீளக்கட்டியெழுப்பும் பொறுப்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடமே ஒப்படைக்கப்பட்டது.

## அதிபர் சோ.இராமநாதன்

B.Com SLPS II 2

(03.10.2012)



வடக்கின் வசந்தம் வடக்குநோக்கி வீச ஆரம்பித்தது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் "வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின்" கீழ் எமது பாடசாலையைப் புனரமைபபதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்பயனாக 150'X25' நீளமான இருமாடிக் கட்டடம் புனரமைக்கப்பட்டதுடன் 90x25 புதிய இருமாடிக்கட்டடத்திற்கான தரைமாடிக்கட்டடம் புதிதாகக் கட்டப்பட்டது. இக்கட்டடத்திலேயே ஆய்வுகூடம் அமைந்துள்ளது. மேலும் ஆண் - பெண்களுக்கான தனித்தனி மலசலகூடங்களும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் நிதிஒதுக்கீடு செய்து தந்து உதவிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களுக்குப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.


யுனிசெப் அமைப்பினால் புதிய தண்ணீர்த்தாங்கி அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய தண்ணீர்த்தாங்கி அமைக்கப்பட்டதுடன் மின்மோட்டார் ஒன்றும் தரப்பட்டது. இந்த மின்மோட்டார் 2012 டிசம்பர் விடுமுறை காலப்பகுதியில் கயவர்களால் அறை உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளது. பாடசாலைக்குக் காவலாளி இன்மையாலும், சுற்றுமதிலோ அல்லது வேலியோ இல்லாமையாலும் மக்கள் நடமாட்டம் குறைவாக இருப்பதாலும் இத்திருட்டு இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், வலயக் கல்வி அலுவலகத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோதிலும் மின்விநியோகம் நீண்டகாலமாக வழங்கப்படவில்லை. எத்தனையோ தடவை முயற்சி செய்தும் ஏதேதோ காரணங்கள் கூறப்பட்டுத் தட்டிக்கழிக்கப்பட்டது. இந்நிலையில்தான் கௌரவ அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அவர்கள் 14.07.2012 அன்று எம்பாடசாலைக்கு வருகை தந்தார். மாணவர்களிடமும், அதிபர் ஆசிரியர்களிடம் பாடசாலையின் தேவைகள் குறைபாடுகளைக் கௌரவ அமைச்சர் கேட்டறிந்தார்.

பாடசாலையில் நின்றவாறே தொலைபேசியூடாக உரியவர்களுடன் தொடர்பு கொண்டார். என்ன ஆச்சரியம்! பலமாதங்களாக வழங்கமுடியாதிருந்த மின் விநியோகம் 24மணிநேரத்தில் வழங்கப்பட்டது. பாடசாலைக்கான மின்சாரவிநியோகம் உத்தியோக பூர்வமாக அமைச்சர் கௌரவ பசில்ராஜபக்ஷ அவர்களாலும், கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களாலும் 20.07.2012 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் மாணவர்கள் அனைவருமே மருதனார் மடம் சபாபதிப் பிள்ளை வீதியிலுள்ள முகாம்களிலும் வீடுகளிலும் இருந்து வருகிறார்கள். இவர்களுக்கான போக்குவரத்து வசதி பெரும் பிரச்சினையாக இருந்தது. CTB தெல்லிப்பளை வரையுமே சேவையாற்றியது. இந்நிலையில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இதனை அறிந்து உடனடியாக பாடசாலை சேவையை மாவிட்டபுரம் வரை வரவழைத்து எமக்கு உதவினார். அவர் எமது பாடசாலைக்கு ஆற்றிய உதவிகளைப் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவுகூரும் என்பதில் ஐயமில்லை.

மேலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் எமது பாடசாலையின் பழைய மாணவருமான கௌரவ மாவைசேனாதிராஜா அவர்கள் பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒருஇலட்சம் ரூபாவை நூலகத் தளபாடக் கொள்வனவுக்காக வழங்கியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள் உரிதாகுக.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கி

# தொலைபேசி மூலம் தொந்தரவு; ஐவர் பொலிஸ் நிலையத்தில்

(திருநெல்வேலி)

வீட்டுத்தொலைபேசிக்கு அடிக்கடி அழைப்பை எடுத்து மாணவி ஒருவருக்கு தொந்தரவு கொடுத்த ஐந்து இளைஞர்கள் குறித்து சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இளைஞர்களில் மூவர் சாவகச்சேரி பிரபல கல்லூரியொன்றில் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களாவர். ஒருவர் பாடசாலையை விட்டு விலகியவரும், மற்றயவர் ஒருதொழிலாளியுமாவார்.

உள்வரும் அழைப்புக்களின் இலக்கங்கள் காட்டும் பி.எல்.ஏ. எனப்படும் கருவி அவ்வீட்டுத் தொலைபேசியில் பூட்டப்பட்டிருப்பதை அறியாத இவர்கள், வீட்டிலிருந்த மாணவிக்குத் தொந்தரவு கொடுக்கும் வகையில் அழைப்புக்களை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வகையில் பத்தொன்பது அழைப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளதாக மாணவியின் தந்தையினால் முறையிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாடசாலையை விட்டு விலகியிருந்த இளைஞன் நேற்று முன்தினம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரிக்கப்பட்டார். தாங்கள் ஐவரும் முயல்வாங்கச்சென்றபோது நண்பர்களான இதர மாணவர்களில் ஒருவர் தனது கைத்தொலைபேசியை பெற்றுக் கதைத்ததாகத் தெரிவித்து அவர்களது பெயர் விபரங்களையும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அம்மூன்று மாணவர்களும் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மாணவியின்பெயரைக் குறிப்பிட்டு அவர் எங்கே, ரியூசனால் எத்தனை மணிக்கு வருவார் எனத் தேவையற்ற கேள்விகளை அழைப்பினை சிலவேளைகளில் பெற்றுக்கொளும் தாய், சகோதரனிடம் இவர்கள் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மீசாலை, அல்லாரை, கச்சாய் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (137)

## கூவில் அண்ணமகேஸ்வரர் ஆலயத்திற்கு அடிக்கல்நாட்டல்



கூவில் அண்ணமகேஸ்வரர் ஆலயம் புதிதாக அமைக்கப்படவுள்ள நிலையில் ஆலய புனர்நிர்மாண வேலைகளுக்காக அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் வலிகாம பிரதேச இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), வலி.வடக்கு அமைப்பாளர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்பு), வலி.தெற்கு பிரதேச அமைப்பாளர் வலன்ரின் மற்றும் அரிகரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தனர். இதில் ஆலயத்தின் தலைவர் நாகமுத்து சண்முகரத்தினம், செயலாளர் கமலேஸ்வரன் வசந்தகுமார் மற்றும் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள், நிர்வாகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (95)

## திருட்டுச் சம்பவங்கள் வடமராட்சியில் அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கரணவாய் வடமேற்கு சாண்டாந்தை சந்தைக்கருகில் பூட்டியிருந்த வீட்டினுள் உள்நுழைந்த திருடர்கள் 8 பவுண் தாலிக் கொடியொன்றினைத் திருடிச் சென்றுள்ளனர்.

ஊரில் உள்ளவர்கள் அருகில் உள்ள சிவகாமி அம்பாள் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுக்குச் சென்றிருந்த சமயமே இத்திருட்டு இடம் பெற்றுள்ளதாகவும், இது குறித்து வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை வடமராட்சியிலுள்ள பொலிகண்டி, திக்கம் ஆதிகோவிலடி போன்ற பகுதிகளில் நல்லின கிடாய் ஆடுகள் பலவும் களவுபோயுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (116)

## தையல் இயந்திரங்கள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேச பெண்களுக்கான தையல் இயந்திரங்களை வட மாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி மற்றும் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்து வட மாகாண பெண்கள் அமைப்பின் தலைவி திருமதி. எஸ்.கீதாஞ்சலியிடம் வழங்கிவைத்தனர்.

வட மாகாண பெண்கள் அமைப்பின் வேண்டுகோளுக்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தினைச் சேர்ந்த வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 10 பெண்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் தையல் இயந்திரங்களை வழங்கி வைத்தனர்.




## புனரமைக்கப்படாத நவீல்ட் ஒழுங்கை; நெருக்கடியில் போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

கைதடி - ஏ.9 வீதியில் இருந்து கைதடி - கோப்பாய் வீதியை சென்றடையும் நவீல்ட் ஒழுங்கை இதுவரை புனரமைப்பு செய்யப்படாத நிலையில், அவ்வீதியால் பயணிப்போர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பிட்ட மேற்படி வீதியில், புழுதி நிலையில் சில கிலோமீற்றர் தூரம் காணப்படுவதோடு, மழை காலங்களில் சேறும் சகதியுமான வழுக்கும் நிலையில் இருப்பதால், பலர் சறுக்கி விழுந்தெழும்பிய சம்பவங்களும் நிகழந்துள்ளன.

மேலும் இவ்வீதியில் வடமாகாண அமைச்சுக்குரிய திணைக்களங்கள் பல இயங்குவதோடு, இவ் வீதியைப் பொதுமக்கள் மட்டுமன்றி, கைதடி நவீல்ட் பாடசாலையைச்சேர்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் செவிப்புலன், விழிப்புலனற்றோர் எனப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், கோதீவு - சங்குப்பிட்டியூடாகவும் நாவற்குழியில் இருந்தும் யாழ். பருத்தித்துறை வீதி கோப்பாயூடாகச் செல்பவர்கள், தங்கள் குறுகிய நேரப்பயணம் கருதி இவ்வீதியைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(138)

## பதிவிறக்கப் பெட்டகம்

கவிஞன் ஒரு சுமையால் நசுக்கப்படுகிறான். ஆறுதல் அடைவதற்காக அவன் அதனை இறக்கி வைத்தாக வேண்டும். – ரி.எஸ்.எலியட்

கவிதைகள் ஒரே மூச்சில் படித்து அனுபவிக்கக் கூடிய நாவல்கள் அல்ல. ஒவ்வொரு கவிதைக்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட மன அவகாசம் தேவை. ஒவ்வொரு கவிதையை படிக்க ஆரம்பிக்கும்போதும் ஆர்வமுள்ள திறந்த மனம் மிகமிக அவசியம். – எஸ். வைத்தீஸ்வரன்

வாசிப்பு என்பது கவிஞனின் தனிமனிதப் பூகோள வெளியை வாசகன் தனது மனவெளியாக மாற்றும் மந்திரச் செயல்பாடு. கவிதை படிக்கப்படும்போது ஒரு படிமச் சித்திரம் வாசகனுக்குள் காலி வெளியை உருவாக்குகிறது. இந்தக் காலிவெளியை வாசகன் தன் கற்பனையின் துணைகொண்டு நிரப்ப வேண்டும். கருத்தியல் ரீதியாகப் பார்ப்போமானால், ஒரு கவிதைப் பிரதியானது வாசகனின் மனதில்தான் முழுமையாக நிறைவேற்றப்படுகிறது. கவிஞனின் சொற்களுக்கு இடைப்பட்ட வெளிகளை நிரப்ப வேண்டிய பொறுப்பும் பொறுமையும் வாசகனுக்குத்தான் உண்டு. புரியவில்லை என்று தூக்கி வைத்துவிட்டால் கவிதைப் பரிமாற்றமும் நடைபெறுவதில்லை – குறைந்தபட்ச செய்திப் பரிமாற்றம்கூட. வாசகன் தான் படித்துச் சேகரித்திருக்கும் சில அனுபவங்களைக் கொணர்ந்து குறைந்தபட்ச மனக்காட்சிகளை உருவாக்கிக்கொள்ள முடியும் – வேண்டும். கவிதைப் பிரதியில் எழும்பும் ஓசையின் எதிரொலி வாசகனின் மனதில் வேறு பல ஓசைகளை நினைவூட்ட வேண்டும். காட்சிப்படுத்தல் என்பது வாசக அனுபவத்திற்கு மிக அடிப்படையான ஒன்றாகக் கருதப்படுகிறது. சரியான வாசகன் தன் வாசகப் பிரதியை உருவாக்கி முடிக்கும்பொழுது ஒரு படைப்பாளி அளவுக்கு உயர்ந்த ஸ்தானத்தை அடைகிறான். – பிரம்மராஜன்

எந்த வரிகளின் முன் இதயத்தையும் மூளையையும் ஒரு சேர நீ இழக்கவும் பெறவும் செய்கிறாயோ அதுவே உனக்கான கவிதை. – க.மோகனரங்கன்

கவிதைக்கு வடிவத்தை விட, சொல்லாமல் விட்ட வரிகளைப் பற்றி சிந்திக்க வைப்பது என்பது முக்கியம். மேலும், தேவைப்பட்ட அளவுக்கு மிகச் சிக்கனமாக கோடி காட்டிவிட்டு கவிதானுபவத்தை வாசகனுக்கு விட்டுவிடும் கவிதைகள் சிறப்பானவை. அதில் ஒரு படிமத்தையும் தன்னுடைய ஞாபகங்களையும் ஒத்துப் பார்க்கும் ஆனந்தம் நல்ல கவிதைகளுக்கு நிச்சயம் உண்டு. – ஞானி

கவிதையைப் புரிந்துகொள்ள நீங்கள் கொஞ்சமேனும் கவிஞராக இருக்க வேண்டும். – சுஜாதா

புரிந்துகொள்ள முயற்சிப்பது செயலை நிறுத்திவிடும். – நீட்ஷே

கவிதையில் இரண்டு மொழிகள் இயங்குவதாக ஓர் அனுமானம் எனக்கிருக்கிறது. ஒன்று: கவிதையின் பொது மொழி (Common Idiom). மற்றது: கவிஞனின் தனிமொழி (Personal Idiom). காலங்காலமாக பெயர்பெற்றவர்களும் பெயரற்றவர்களுமான கவி ஆளுமைகள் இயங்கி உருவானது இந்தப் பொதுமொழி. புதிய கவிஞன் இந்த மொழியின் நிகழ்காலக் கண்ணி. அவன் விரும்பினாலும் விலகினாலும் இந்தப் பொதுமொழியின் தொடர்ச்சியாகிறான். நதி என்று இன்றைய கவிஞன் எழுதுகையில் அது காலத்தின் ஓட்டம் என்றும் பறவை என்று எழுதுகையில் அது சுதந்திரம் என்றும் பொருள்படுவது இந்தப் பொதுமொழியால் தான். இந்தப் பொதுமொழியை உள்வாங்கிக் கொண்டு செயல்படும்போதே ஒரு கவிஞன் தனது தனிமொழியையும் உருவாக்கிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகிறான். தனது அனுபவம் சார்ந்து அவன் உருவாக்கும் இந்த கவிமொழியே வாசக கவனத்தில் கவிஞனின் அடையாளமாகிறது. – சுகுமாரன்

பொருளின் பொலிவும் சொல்லின் திறமும், தொடையும் தொடைக்கண், விகற்பமும் துதைந்தாங்கு, உருவகம் முதலாம் அலங்காரங்களை, உட்கொண்டோசை பொலிவுடைத்தாகி, உய்த்துணர்வோர்தம் உள்ளங்கட்கு, மால்கடலமுதம் போல் பாடுவது மதுரகவி. – பிங்கலந்தை

சிந்தனை, தெளிவு, சிக்கனம், ஆனந்தம், கவிதை. – ஞானக்கூத்தன்

கனவு மெய்ப்பட வேண்டும். – பாரதி

# பொய்த்தகவல்களைச் சேகரிக்கவே அமெரிக்க குழு இலங்கை வருகை

## என்கிறார் அமைச்சர் விமல்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி நீக்கியதை சாட்டாக வைத்துக் கொண்டு பொய்த்தகவல்களை சேகரிப்பதற்காக அமெரிக்க குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

திம்பிரிகாசாயவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள பாடசாலைகளில் கல்விபயிலும் 130 மாணவர்களுக்கு பாடநூல்களை வழங்கிவைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமெரிக்காவிலிருந்து வருகைதந்துள்ள மூவரும் இலங்கைக்கு எதிரான தகவல்களை திரட்டுவதற்காகவே வருகைதந்துள்ளனர்" அவர்கள் வடக்குக்குச் சென்று பிரிவினைவாதி களையும் அமெரிக்க நன்கொடை நிதியம் பெறும் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றனர்.

இவர்கள் மேலும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதற்கு சாட்சிக்காரர்களைத் தேடி வந்துள்ளனர். ஏற்கனவே இவர்கள் அரங்கேற்றிய நாடகம் தோற்றுப்போனதாலேயே மீண்டும் ஒரு நாடகத்தினை அரங்கேற்றவே வருகைதந்துள்ளனர்.

இந்த நாட்டில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், படைத் தளபதிகளையும் மற்றும் அதிகாரிகளும் யுத்த காலத்தில் அநீதி இழைத்தவர்கள் என்ற போர்வையில் சர்வதேச நீதி மன்றத்திற்கு நிறுத்துவதற்கு முயற்சித்து வருகின்றார்கள்.

இலங்கையின் தற்போதைய ஆட்சிக்கு எதிராகச் செயற்படுபவர்களிடமிருந்து தகவல் சேகரித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் முக்கிய சாட்சிக்காரர்களாக உள்ளனர்.

பராக் ஒபாமாவுக்கும் அவரது அதிகாரிகளுக்கும் அங்கு நித்திரைகொள்ள முடியவில்லை. இலங்கை வரும் பிரதிநிதிகளிடம் சாட்சி சொல்வதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை இங்குள்ள சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் சில முகவர்களும் முயற்சிக்கின்றனர். ஷிரானி பண்டாரநாயக்கா குற்றம் இழைத்தவர் நாடாளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் ஊடாக மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் மூலம் அவர் பதவி நீக்கப்பட்டார்.

சரத் பொன்சேகாவை பயன்படுத்தி சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக ஐ.நா.மனித உரிமை தீர்மானத்தை நிறைவேற்ற சாட்சிக்காரராகவும் பாவித்தார்கள். அவர் இலங்கைக்கு எதிராகவும் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராகவும் இலங்கை ஊடகங்களில் தெரிவித்த கருத்தே சில வெளிநாட்டு சக்திகளுக்கு சாட்சியாக அமைந்தது. மேலும் இலங்கைக்கு எதிராக வேண்டுமென்று யுத்தக் குற்றப் பழியை சுமத்தி ஐ.நா. மனித உரிமை பேரவையிலும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றினார்கள். இத்திட்டத்திற்கு சில வெளிநாடுகளில் உள்ள வெள்ளைப் புலிகளும் அந்த நாட்டில் வாழும் இலங்கைப் புலிகளும் சூழ்ச்சி செய்து வருகின்றனர்" என்றார்.



முழங்காவில் கிருஸ்ணாநகர் வீதி புனரமைப்பிற்காக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கிரவல் மண் பறிக்கப்பட்ட நிலையில், வீதி திருத்தப்படாமல் உள்ளதுடன், பறிக்கப்பட்ட மண்ணிலும் புற்கள் முளைத்து காணப்படுகிறது. நடுவீதியில் பறிக்கப்பட்ட இந்த மண்ணினால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதனைக் காணலாம். (09)

# பல்கலைக்கு பெருமளவு மாணவரை இணைப்பதில் சிக்கல்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு அதிகளவு மாணவர்களைச் சேர்ப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2011 - 2012ஆம் கல்வி ஆண்டுக்காக 5609 மாணவ, மாணவியர் மேலதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர.

எனினும், இவ்வாறு அதிகளவு மாணவ, மாணவியரை சேர்த்துகொள்வதனால் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தெரிவித்துள்ளது. 2012ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கு அமைய பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒரேநாளில் 42 டொல்பின்கள் கற்பிட்டி கடலில் மரணம்



(கொழும்பு)

கற்பிட்டி கடற்பரப்பில் பெருமளவான டொல்பின்கள் மரணமாகி வருவ்ன்றமை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அப்பிரதேச மீனவர்கள், இந்தக் கடற்பரப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும 42 டொல்பின்கள் பலியாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி சிலரால் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் நடவடிக்கைகளின் போதே டொல்பின்கள் மரணிப்பதாக மீனவர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக புதிய கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவிக்கையில், இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு மின்மானி ஊழியர் விளக்கமறியலில்

(கொழும்ப)

45 ஆயிரம் ரூபாவை இலஞ்சம் வாங்கியதாகக் கூறப்படும் இலங்கை மின்சார சபையின் மின்மானி வாசிப்பு ஊழியர் ஒருவரை பெப்ரவரி 8 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

மரக்கறி வியாபாரி ஒருவரின் வீட்டுக்கு மின் மானியுடனான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக 45 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய குற்றஞ்சாட்டின் பேரில் சந்தேக நபரான நுவரெலியா மின்சார சபை ஊழியர் சந்தன பண்டார என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முதலில் 60 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரினாலும் பின்னர் அதை 45 ஆயிரம் ரூபாவிற்கு குறைத்துக் கொள்வதற்கு குறித்த சந்தேகநபர் சம்மதித்துள்ளார்.

இது தொடர்பில் மரக்கறி வியாபாரி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர் மரக்கறி வியாபாரியிடமிருந்து 45 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட போது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# பணமோசடியில் ஈடுபட்ட இலங்கையர் கைது

(கொழும்பு)

தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தில் (ஏ.ரி.எம்.) போலியான தன்னியக்க பணப்பரிமாற்று அட்டைகளைப் பயன்படுத்தி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரை ரோயல் புரூனைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர் நாட்டை விட்டு வெளியேறும் நோக்கில் விமானத்தில் ஏறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் புரூனை விமான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2 போலியான தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டைகள் தமது தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தினுள்ள சிக்கியிருப்பதாக வங்கியொன்று கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் இச்சந்தேக நபரை நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது, இவருக்கு 2 வாரங்களுக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

# ஹெரோயின் வைத்திருந்த தாய்க்கு மரண தண்டனை

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருளை கடத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பெண் சந்தேகநபர் ஒருவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இரண்டு பிள்ளைகளின் தாயொருவருக்கே கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

மேல் நீதிமன்ற நீதிபதி பத்மன் சூரசே மரண தண்டனையை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

21.76 கிராம் ஹெரோயினை விற்பனைக்காக 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி கடத்தி வந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட கிராண்ட்பாஸை சேர்ந்த ஒருவருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை அவர் நிராகரித்த போதிலும், இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்து இடமின்றி நிரூபிக்கப்பட்டதாகக் கூறி நீதிபதி மரணதண்டனையை விதித்து தீர்ப்பளித்தார்.

# ஊடக சுதந்திரத்திற்கு தொடர்கிறது ஆபத்து

இலங்கையில் ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. 2013ஆம் ஆண்டுக்கான ஊடக சுதந்திர சுட்டெண் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் ஊடக சுதந்திர நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடக சுதந்திர வரிசையில் இலங்கை 162ஆம் நிலையை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் உலக ஊடக சுதந்திர தர வரிசையில் இலங்கை 163ஆம் இடத்தை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப்பட்டியலில் மொத்தமாக 179 நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகில் மிகவும் அதிகளவு ஊடக சுதந்திரமுடைய நாடாக பின்லாந்தும், மிகவும் மோசமான முறையில் ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்ட நாடாக எரித்திரியாவும் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

**தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் இடுக.**

22. வயல்களில் வெள்ளைத் துணித் துண்டுகளைத் தொங்கவிடுவதன் மூலம் குருவிகளின் பறவைகளின் வரவைக் குறைக்கலாம். ( )
23. வெண்டி மரத்தின் விதைகளை நாட்டுவதன் மூலம் புதிய வெண்டித் தாவரங்களை உருவாக்கலாம். ( )
34. மரவள்ளித் தாவரத்தில் வேரில் உணவு சேமிக்கப்படுகின்றது. ( )
25. குளவி, எறும்பு, தேனீ என்பன தனிவாழ்க்கைக்குரிய அங்கிகளாகும். ( )
26. மயிர்க்கொட்டி என்பது வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கைப் பருவங்களுள் ஒன்றாகும். ( )
27. வாகன ஒளிச் சமிக்ஞை விளக்குகளில் சிவப்பு, செம்மஞ்சள், பச்சை நிறமுடைய மின்விளக்குகள் காணப்படும். ( )
28. கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக் கூடாது.
   1) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
   2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
   3) கழுதை அறியுமா கற்பூர வாசனை

**பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமானதாக ஒவ்வொன்றின் கீழேயுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் அமையும். அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

29. புண்ணிய தலங்களுக்குச் செல்லும் பயணம்?
   1) பிரயாணம் 2) யாத்திரை 3) சுற்றுலா 4) நடைபவனி
30. போட்டி நிகழ்ச்சிகளில் சரி பிழை கூறுபவர்?
   1) அதிபர் 2) நடுவர் 3) மத்தியாளர் 4) சட்டம்பியார்
31. துணியினால் தலையிலே அழகாகக் காட்டப்படுவது?
   1) தொப்பி 2) தலைப்பாகை 3) தலப்பா 4) முட்டாக்கு
32. குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்கும் இடம்?
   1) மனை 2) குடிசை 3) குகை 4) சிறை
33. பல துறைகளிலும் உயர்கல்வி பெறும் இடம்?
   1) ஆச்சிரமம் 2) பல்கலைக்கழகம் 3) கல்லூரி 4) மடைப்பள்ளி

**பின்வரும் கணக்குகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34. 4260 | = | 4000 | + | ..................... | + | 60 | + | 0 |
| 35. 1367 | = | ............... | + | 300 | + | 60 | + | 7 |
| 36. 9823 | = | 9000 | + | 800 | + | ........ | + | 3 |

**சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

37. பூசோலை, பூஞ்சோலை, பூச்சோலை
38. தொழில்சாலை, தொழிற்சாலை, தொழிட்சாலை
39. ஆராய்ச்சி, ஆராச்சி, ஆராட்சி
40. அறுங்காட்சியகம், அருங்காச்சியகம், அருங்காட்சியகம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 33





இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுங்கள்**


1) வயலில் சூடு அடிக்கும் களத்தில் "குல்லம்" என அழைக்கப்படுவது
   1) சுளகு 2) அரிவாள் 3) வைக்கோல்

2) மாடு ரெண்டும் வெள்ளை, மனிதன் ரெண்டும் தஞ்சாவூரு.... எனும் பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?
   1) அருவி வெட்டும் போது 2) வண்டி ஓட்டும்போது
   3) தாலாட்டும் போது 3) ஓடம் ஓட்டும் போது

3)  உருவில் பலகையொன்றில் ஆணி பொருத்தப்பட்டுள்ளது. அவ் ஆணியைக் கழற்றுவதற்கு பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான உபகரணம் எது?



1) 2) 3) 4)

4) மெல்லிய நூலொன்றினால் காந்தம் ஒன்று கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளதை உரு 1 காட்டுகிறது. குறித்த ஒரு பொருளை காந்தத்தின் அருகில் கொண்டு வந்தபோது, காந்தத்தின் நிலையை உரு 2 காட்டுகிறது. காந்தத்திற்கு அருகில் கொண்டு வந்த பொருள் எது?





1) பிளாஸ்ரிக் 2) இரும்பு 3) பித்தளை 4) அலுமினியம்


5) உலர் மின்கலங்கள் (C) இரண்டும், மின்குமிழ் (B) ஒன்றும் வயர்துண்டுகள் மூன்றும் கீழே உள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஒளிரும் மின்குமிழைக் கொண்ட உரு எது?

1) 2) 3) 4)



6) கல் ஒன்றைப் புரட்டுவதற்காக நெம்புகோல் ஒன்றையும் சிறிய மரத்துண்டொன்றையும் பயன்படுத்தக்கூடிய முறையை, பின்வரும் உருக்கள் காட்டுகின்றன. மிக இலகுவாக இக்கல்லைப் புரட்டுவதற்கு மரத்துண்டை வைக்க வேண்டிய இடத்தை சரியாகக் காட்டும் உரு எது?

1) 2) 3) 4)



7)  உருவில் காட்டப்பட்டுள்ள திருகாணியைப் பொருத்தப் பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான கருவி பின்வருவனவற்றுள் எது?




8) கல்லொன்றை இலகுவில் புரட்டுவதற்கு நெம்பு பிடிக்கப்பட வேண்டிய மிகச் சரியான முறையைக் காட்டும் படம் எது?




9) இரு உலர் மின்கலங்கள் (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆளி (S) ஆகியன வயர் துண்டுகளின் மூலம் பின்வரும் ஒவ்வொரு விதமாக தொடுக்கப்பட்டுள்ளன. ஆளி (S) மூடும்போது, மின்குமிழ் ஒளிரும் உரு எது?




10) ஆலையிலே சோலையிலே ஆலங்காடி சந்தையிலே கிட்டிப்புள்ளும், பம்பரமும் குறுகியடிக்கப் பாலாறு பாலாறு .......... மேலே தரப்பட்டுள்ள பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?

1) கிட்டிப்புள் 2) எல்லே 3) பம்பரமாட்டல் 4) நீச்சற்போட்டி


11) மீனவர் சிறு மீனைப் பிடிப்பதற்கு பயன்படுத்தும் கூடைவடிவில் அமைந்த உபகரணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

1) நாம்புவ 2) கரைவலை 3) மடி 4) அத்தாங்கு


12) நிலைபேறான காந்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் எது?

1) மின்மணி 2) மின்பாரம்தூக்கி 3) ஒலிபெருக்கி 4) செவிப்பன்னி


13) பின்வரும் எந்தச் சந்தர்ப்பத்தில் மின்குமிழ் ஒளிரமாட்டாது







14. 


1) 9
2) 1
3) 20


15. 


1) 3
2) 15
3) 54

16. 


1) 72
2) 52
3) 90

**குமார் என்ற மாணவன் தன்னைச் சுற்றி விளையாட்டுப் பொருட்களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. அதை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**




17. குமார் வடக்குத் திசையில் வைத்த பொருள் எது?

.............................................................................................................

18. குமார் சைக்கிளை எத்திசையில் வைத்தான்?

.............................................................................................................

19. குமாரின் மேற்குத் திசையில் காணப்படும் பொருள் எது?

.............................................................................................................

20. குமார் வைத்த விளையாட்டுப் பொருட்களில் நீர்வழிப்போக்குவரத்துச் சாதானம் எது?

.............................................................................................................

21. குமார் பேருந்தை எத்திசையில் வைத்திருக்கின்றான்?

.............................................................................................................

# மும்பை தாக்குதல் வழக்கு விசாரணை பாகிஸ்தான் குழுவிற்கு அனுமதியளிப்பு



(மும்பை)

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய வழக்கில் தீவிரவாதி அஜ்மல் கசாப் தூக்கில் போடப்பட்டான். அத்துடன் இந்தியாவில் நடந்த மும்பை தாக்குதல் வழக்கு முடிவுக்கு வந்தது. இதற்கிடையே மும்பை தாக்குதல் வழக்கை பாகிஸ்தான் அரசும் தனியாக விசாரிக்கிறது. இதற்காக ஏற்கனவே பாகிஸ்தான் விசாரணை குழு மும்பை வந்து விசாரணை நடத்திச் சென்றது.

இந்த நிலையில் இந்த வழக்குத் தொடர்பாக மும்பையைச் சேர்ந்த 4 அதிகாரிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த பாகிஸ்தான் விசாரணைக் குழு திட்டமிட்டுள்ளது. இதற்காக அவர்கள் மும்பை வரத்திட்டமிட்டுள்ளனர். இதற்கு இந்திய வெளியுறவுத்துறையின் அனுமதியை பாகிஸ்தான் கோரியது. இதற்கு இந்தியா அனுமதி அளித்துவிட்டது.

பாகிஸ்தான் விசாரணைக் குழு எப்போது வேண்டுமானாலும் மும்பை வந்து விசாரணை நடத்தலாம் என்று கூறியுள்ளது. இதுபற்றி பாகிஸ்தான் உள்துறை மந்திரி ரகுமான் மாலிக் கூறியதாவது,

மும்பைத் தாக்குதல் வழக்கு தொடர்பாக 4 அதிகாரிகளிடம் குறுக்கு விசாரணை நடத்த பாகிஸ்தான் விசாரணை குழுவுக்கு இந்தியா அனுமதி அளித்து விட்டது. எனவே அவர்கள் தாமதமின்றி மும்பை புறப்பட்டுச்செல்வார்கள். எந்த திகதியில் செல்வது என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப் படவில்லை. அனேகமாக பெப்ரவரி மாத மத்தியில் பாகிஸ்தான் குழு மும்பை செல்லும் என அவர் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# “விஸ்வரூபம்” ரிலீஸில் பிரச்சினை; மத்திய அரசு விசாரிக்கும்




(புதுடில்லி)

விஸ்வரூபம் படத்தை தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் ரிலீஸ் செய்வதில் என்ன பிரச்சினை என்று மத்திய அரசு விசாரணை நடத்தும் என உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தெரிவித்துள்ளார். விஸ்வரூபம் படத்திற்கு தமிழக அரசு விதித்துள்ள தடை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டேயிடம் கேட்டதற்கு அவர் கூறுகையில், நாம் சுந்திரமான சமூகத்தில் உள்ளோம்.

இங்கு கருத்துச் சுதந்திரம் உள்ளது. கலைஞர்களுக்கு சுதந்திரம் உள்ளது. நமக்கு என்று அரசியலமைப்பு உளளது. அந்த அரசியல் அமைப்பை அனைவரும் மதிக்க வேண்டும். கலைஞர்கள் தங்கள் பணியைச் செய்ய அவர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

விஸ்வரூபம் படத்தை ரிலீஸ் செய்ய தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் எதற்காக பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று மத்திய அரசு விசாரணை நடத்தும் என்றார்.

# இந்தியாவில் பாதுகாப்பாக உள்ளாராம் ஷாருக்கான்



(மும்பை)

“நான் இந்தியாவில் பாதுகாப்பாக உள்ளேன். யாருடைய, தேவையற்ற ஆலோசனையும் எனக்குத் தேவையில்லை” என பொலிவுட் நடிகர் ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

ஆங்கில பத்திரிகை ஒன்றில், இந்தியாவில் வசிக்கும் முஸ்லிம்கள் குறித்து கட்டுரை எழுதிய நடிகர் ஷாருக்கான், “பிரபலமான நபராக இருந்த போதிலும், முஸ்லிம் என்பதால், நான் அவ்வப்போது அரசியல் கட்சிகளால் மிரட்டப்பட்டேன். என் தந்தை சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றவர் என்ற நிலையிலும், என்னை பாகிஸ்தானுக்கு விரட்ட சிலர் முயன்றனர்” என எழுதியிருந்தார். அவருக்கு ஆதரவு தெரிவித்து, பாகிஸ்தானின் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவன் ஹபீஸ் சயீத், பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் ஆகியோர் குரல் கொடுத்தனர்.

அந்த அண்டை நாட்டு ஆதரவு குரல்களுக்கு, இந்தியாவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த விவகாரம் ஒரு வாரமாக நடந்து வந்த போதிலும், வாய் திறக்காமல் மவுனியாக இருந்த நடிகர் ஷாருக்கான், நேற்றுமுன் தினம் வாய் திறந்தார்.

மும்பையில் அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து கூறியதாவது; நான் இந்தியாவில் பாதுகாப்பாக உள்ளேன். யாருடைய, தேவையற்ற ஆலோசனையும், ஆதரவும் எனக்குத் தேவையில்லை. என் நாட்டில் உள்ள ஜனநாயகம் எனக்குத் சுதந்திரமான மதச்சார்பற்ற வாழ்க்கையை மேற்கொள்ள அனுமதிக்கிறது. இந்தக் குழப்பம் ஏன் ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை.

நான் சில மதவாத சக்திகளைப் பற்றித் தான் குறிப்பிட்டிருந்தேன். அதில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எனக்கு இந்தியாவில் பாதுகாப்பு இல்லை எனக் குறிப்பிடவே இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக, கோடிக்கணக்கான இந்திய ரசிகர்கள் என்னை ஆராதித்து வருகிறார்கள். எனக்கு இந்தியாவில் எந்தப் பிரச்சினையும் இல்லை இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க.பிரதமர் வேட்பாளராக சுஷ்மாவை அறிவிக்க வேண்டும்

## —— சிவசேனா வலியுறுத்து ——

(புதுடில்லி)

பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக அக்கட்சியின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜை அறிவிக்க வேண்டும் என்று பா.ஜ.க கூட்டணியில் உள்ள முக்கிய கட்சியான சிவசேனா தெரிவித்துள்ளது. பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளராக குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை நிறுத்த வேண்டும் என்று பா.ஜ.க மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா கோரியுள்ளார்.

இதற்கு மூத்த பா.ஜ.க தலைவர் ராம் ஜெத்மலானியும் ஆதரவு தெரிவித்துள்ளார். இதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்து கூட்டணிக் கட்சிகளின் கருத்தை அறிய உடனடியாக கூட்டணியின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் பா.ஜ.க கூட்டணியில் உள்ள இன்னொரு முக்கியக் கட்சியான சிவசேனா, பா.ஜ.க மூத்த தலைவரான சுஷ்மா சுவராஜை கட்சியின் பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

# “விஸ்வரூபம்” மீதான தடை சரி என்கிறார் “சோ”



(சென்னை)

விஸ்வரூபம் படத்துக்கு தமிழக அரசு விதித்துள்ள தடையில் எந்தத் தவறும் இல்லை. சரியான முடிவுதான், என்று துக்ளக் ஆசிரியர் சோ கூறியுள்ளார்.

கமல் நடித்து, இயக்கி, தயாரித்துள்ள விஸ்வரூபம் படத்திற்கு தமிழக அரசால் விதிக்கப்பட்ட தடைக்கு பலரும் தங்களது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், அரசியல் விமர்சகரும் பத்திரிகையாளரும் நடிகருமான சோ, விஸ்வரூபம் தொடர்பாக தமிழக அரசு செய்தது சரியே. படம் தடை செய்யப்பட வேண்டிய படம்தான் என்று கூறியுள்ளார்.

ஆங்கில தொலைக்காட்சிக்கு சோ அளித்த பேட்டியில், தமிழக அரசு விஸ்வரூபம் படத்தை தடை செய்தது சரிதான்.

இப்படித்தான் செய்ய முடியும். ஒரு திரைப் படத்துக்காக, ஒரு நடிகரின் வர்த்தகத்துக்காக மாநில அரசு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவதைப் பொறுத் துக்கொள்ள முடியாது. பொதுமக்கள் நலன் உள்ள திசையிலேயே முதல்வர் ஜெயலலிதா நின்றார். ஒரு படம் சிலரது நம்பிக்கைகளை தகர்க்கும் என்றால், அந்தப் படம் தடை செய்யப்படத்தான் வேண்டும் என்றார்

முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.



பெயர்: வ.ஹரிராஜ், ஹரிசங்கர் உரும்பிராய் மேற்கு உரும்பிராய்.

அகவை 06இல்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................


பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே

# அணைகளை கட்டுகிறது சீனா

சீனாவில் பாயும் பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே மூன்று அணைகளை கட்ட, அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. சீனாவின் திபெத்தில் உள்ள கயிலாய மலையில் உற்பத்தியாகும் பிரம்மபுத்ரா நதி, அந்நாட்டில் யார்லுங் சாங்போ என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. வங்கதேசத்தில் இந்த நதி ஜமுனா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இந்தியாவின் அசாம்



மாநிலத்தில் நுழையும் இந்த நதி, பிரம்மபுத்ரா என்ற பெயர் பெறுகிறது. சீனாவின் திபெத் பகுதியில் ஓடும் பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே, மூன்று அணைகளை கட்ட அந்நாட்டு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த அணை கட்டுவது குறித்து, அந்நாட்டு அரசு இந்தியாவிடம் தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை. இதற்கு, பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதரகம் வருத்தம் தெரிவித்து உள்ளது. சீன வெளியுறவு அதிகாரி ஹாங் லீ குறிப்பிடுகையில், "இந்த நதியின் குறுக்கே அணை கட்டுவதால், இந்தியா மற்றும் வங்கதேசத்தில் பாயும் ஆற்றில் நீரின் வேகம் குறையாது. தற்போது கட்டப்பட உள்ள அணையிலிருந்து நாங்கள் மின்சாரம் தயாரிக்கவில்லை" என்றார்.

# விமானத்தை திசைமாறி செலுத்தி மகளை இறக்கிய விமானி



பாகிஸ்தானில் விமானியின் மகளை தரையிறக்குவதற்காக திசை மாறிச் சென்ற விமானத்தால் சர்ச்சை எழுந்துள்ளது. பாகிஸ்தானின் கராச்சி நகரிலிருந்து பாகிஸ்தான் ஏர் லைன்ஸ் விமானம் இஸ்லாமாபாத் நோக்கி புறப்பட்டது. இதில் பயணித்த அனைத்துப் பயணிகளும், விமானம் இஸ்லாமாபாத் நோக்கி செல்வதாக நினைத்திருந்தனர். ஆனால், இந்த விமானம் திடீரென லாகூர் நோக்கி சென்று தரையிறங்கியது. இஸ்லாமாபாத் புறப்பட்ட விமானம் ஏன் லாகூரில் தரையிறங்கியது என பயணிகள் கேட்ட போது, எரிபொருள் நிரப்ப தரையிறங்கியதாக ஒரு தரப்பு ஊழியர்கள் தெரிவித்தனர்.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டதால் தரையிறக்கப்பட்டதாக மற்றொரு தரப்பு ஊழியர்கள் தெரிவித்தனர். லாகூரில் விமானம் தரையிறங்கிய போது, இளம் பெண் ஒருவர் விமானத்திலிருந்து இறங்கிச் சென்றார். பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் விமான ஓட்டியாக உள்ள தாரிக் ஜாவித்தின் மகள் இவர் என்பது பின் தெரியவந்தது. இவரை தரையிறக்குவதற்காகத் தான், இஸ்லாமாபாத் நோக்கி சென்ற விமானம், லாகூரில் தரையிறங்கிய விவரம் தெரிந்தது. இதனால், இந்த விமானத்தில் பயணித்தவர்கள் கொந்தளித்தனர்.

# ஒபாமாவின் செல்வாக்கு அதிகரித்திருப்பதாக தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அதிபராக மீண்டும் பொறுப்பேற்றிருக்கும் ஒபாமாவின் செல்வாக்கு முன்பைவிட அதிகரித்திருப்பதாக கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. அமெரிக்க அதிபராக ஒபாமா பொறுப்பேற்ற சில நாட்களில் வோஷிங்டன் போஸ்ட் மற்றும் ஏபிசி இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில், ஒபாமாவின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்திருக்கிறது.

கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்ததைவிட சுமார் 7% கூடுதல் ஆதரவு ஒபாமாவுக்கு கிடைத்திருக்கிறது. மொத்தம் 60% பேர் ஒபாமாவுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்திருக்கின்றனர். இருப்பினும் 37% பேர் ஒபாமாவுக்கு எதிராகவும் கருத்து தெரிவித்திருக்கின்றனர். இந்த கருத்துக் கணிப்பானது கடந்த 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் குறிப்பாக ஒபாமா அதிபராக பொறுப்பேற்றபோது ஆற்றிய உரைக்குதான் அதிக ஆதரவும் கிடைத்திருக்கிறதாம்.

# சாரதியை சுட்டுக்கொன்று கடத்தப்பட்டன குழந்தைகள்

## அமெரிக்காவில் தொடரும் பரபரப்பு

அமெரிக்காவில் பாடசாலை பேருந்து சாரதியை சுட்டுக் கொன்று, குழந்தைகளை கடத்திச் சென்ற மர்ம நபர்களால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் பள்ளிப் பேருந்து ஒன்றில் ஏறிய துப்பாக்கி ஏந்திய மர்ம நபர் ஓட்டுநரை சுட்டுக் கொன்றான்.

அதன் பின் பேருந்தில் இருந்த பள்ளிக் குழந்தையைக் கடத்திச் சென்று பதுங்கு குழிக்குள் மறைந்து கொண்டான்.


குழந்தைகளை பத்திரமாக மீட்பதற்காக பொலிஸார் அவனுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

குழந்தைகள் கடத்தப்பட்ட தகவல் வெளியானவுடன் அங்குள்ள சாலைகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டதுடன், அருகில் உள்ள மூன்று பள்ளிகளின் வகுப்புகள் இரத்துச் செயயப்பட்டன.

# வெளியுறவுச் செயலராக கெர்ரி அமெரிக்க மேலவை அனுமதி

தற்போது வெளிவிவகாரத் துறை அமைச்சராக உள்ள ஹிலாரி கிளிண்டனின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடைய உள்ளது. இதனைத் தொடர்ந்து ஜோன் கெர்ரி வெளிவிவகாரத்துறை அமைச்சராக பொறுப்பேற்க உள்ளார்.

இதுதொடர்பாக செனட்டில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஜான் கெர்ரிக்கு ஆதரவாக 94 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் பதிவாகின.




ஜோன் கெர்ரியின் தெரிவுக்கு பல்வேறு செனட் உறுப்பினர்கள் வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர்.

ஜனநாயகம், மனித உரிமை மற்றும் உலக அமைதி ஆகியவற்றில் கெர்ரி பின்பற்றும் சிறப்பான கொள்கைகள், வெளிவிவகார அமைச்சகத்திலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதில் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாவது ரொக்கெட்டை செலுத்தியது தென்கொரியா



(சியோல்)

தென்கொரியா 'கே.எஸ்.எல்.வி - 1' என்று பெயரிடப்பட்ட தனது முதல் ரொக்கெட்டை நேற்று விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியது. கோகேயுங் என்ற இடத்தில் உள்ள 'நாரோ' விண்வெளி மையத்தில் இருந்து செலுத்தப்பட்ட இதில், அறிவியல் ஆராய்ச்சிக்கான செயற்கைக் கோள்ள வைத்து அனுப்பி உள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் தென்கொரியா 2009 ஆம் ஆண்டும், 2010ஆம் ஆண்டும் 2 முறை ரொக்கெட்டை செலுத்த முயற்சி எடுத்தது. ஆனால், கடைசி நிமிடத்தில், தொழில் நுட்ப கோளாறு காரணமாக அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. தென்கொரியா ரொக்கெட்டை வெற்றிகரமாக அனுப்பி உள்ளமையானது வடகொரியாவுக்கு பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மொசாம்பிக் வெள்ளப்பெருக்கு; உயிரிழந்தோர் 80 ஆக உயர்வு



(லிம்பொபோ)

ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் கடந்த ஒரு வார காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள தாழ்வான பகுதியான லிம்பொபோ ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் சொக்வே பகுதியில் பெரும்பாலான கிராமங்கள் நீரில் மூழ்கின. இதில் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு 80இற்கும் மேற்பட்டோர் இறந்து போயினர். 1,50,000 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் நிவாரணப்பணிகள் முழு வீச்சில் நடைபெறவில்லை என்று கூறப்படுகிறது. அத்தியாவசிய தேவைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே உலக நாடுகள் உதவிட முன்வர ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

# மீண்டும் அரசியலில் ஈடுபடமாட்டேன்

## —என்கிறார் ஹிலாரி

மீண்டும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் தமக்கு இல்லை என அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டன் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே ஹிலாரி கிளிண்டன் இதனைத் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சியின் சார்பில் அமெரிக்க தேர்தலில் போட்டியிடும் எண்ணம் உள்ளதா, என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றுடன்அமெரிக்க இராஜாங்க செயலாளர் பதவியிலிருந்து ஹிலாரி கிளிண்டன் விலகவுள்ளார்.

65 வயதான ஹில்லரி அண்மையில் சுகவீனமுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான ஜனநாயக் கட்சியின் வேட்பாளர் தேர்வில் ஜனாதிபதி ஒபாமாவை எதிர்த்து இவர் போட்டியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வடகொரிய வரைபடவிபரம்; விஸ்தரித்துள்ள கூகுள்

சர்ச்சைக்குரிய வடகொரியாவின் வரைபட விபரங்களை கூகுள் விஸ்தரித்துள்ளது. இணையத்தளங்களில் வடகொரியா தொடர்பான விபரங்கள் மிக அரிதான ஒன்றாகவே காணப்படுகின்றன.

தனிமைப்படுத்தப்பட்ட நாடாக இருக்கும் வடகொரியாவின் விரிவான வரைப்படத் தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

எனினும், வடகொரியா தொடர்பாக இதற்கு முன்னர் இருந்ததை விட அதிகமான தகவல்களை தற்போது பெற்றுக்கொள்ள முடியும் என கூகுள் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

கூகுள் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர் எரிக் ஸ்மித்தின் வடகொரியாவிற்கான தனிப்பட்ட மனிதாபிமான விஜயத்தைத் தொடர்ந்து இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# வடக்கில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை



வடமாகாண விளையாட்டுத் துறை அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடலென்று வடமாகாண அளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களின் தலைமையில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் யாழ்ப்பணாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

வடமாகாண விளையாட்டுத் துறை சம்பந்தமாகப் பாரியளவில் செயலமர்வுகள் நடாத்தப்பட் வேண்டும் என்பதுடன் இச் செயலமர்வுகளில் விளையாட்டுத்துறையைச் சேர்ந்தவர்கள் வளவாளர்களாக இணைத்துக் கொள்ளல் வேண்டும் என்றும், தேசிய போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளிற்குப் போதுமான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் அத்தோடு அவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்றும்,

தென்பகுதியின் முன்னணிப் பாடசாலைகள் வடமாகாண பிரபல பாடசாலைகள் என்பவற்றிற்கிடையில் சினேகபூர்வமான முறையில் கிறிக்கெட், கூடைப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் என்பன நடாத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக பாடசாலை அதிபர்கள், உடற்கல்வி அதிகாரிகளுடன் எதிர்வரும் பெப்ரவரி 20 ஆம் திகதி ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு அன்றையதினம் போட்டிக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வடமாகாணம் சார்பாக பதக்கங்கள் பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய ஆயத்தங்களையும், உரிய பயிற்சிகளையும் மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு ஆளுநரால் அறிவுரை வழங்கப்பட்டது.

## அடுத்தவாரம்...

கிடைக்கிறது. என்று ஏற்கனவே திருப்பதி வந்து தரிசனம் செய்தபோது ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார். இந் நிலையிலேயே அவர் அங்கு மூன்றாவது முறையாகவும் தரிசனத்துக்காகச் செல்லவுள்ளார். 8 ஆம் திகதி, கொழும்பில் இருந்து தனி விமானம் மூலம் பீகார் செல்லும் ஜனாதிபதி, அங்கு புத்த கயாவில் வழிபாடு நடத்திவிட்டு அதே விமானத்தில் ஆந்திர மாநிலம் ரேணி குண்டா செல்லவுள்ளார். அங்கிருந்து கார் மூலம் திருமலை செல்கிறார். அங்கு ஏழுமலையானை தரிசனம் செய்து விட்டு மீண்டும் கொழும்பு திரும்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் விஜயத்தை முன்னிட்டு, இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் அங்கு சென்று தேவஸ்தான அதிகாரி சிறினிவாசராவ், பொலிஸ் உயரதிகாரி சுப்புராமரெட்டி ஆகியோருடன் ஆலோசனை நடத்தியுள்ளனர் என்றும் ஜனாதிபதியின் தரிசன நேரம் மற்றும் பாதுகாப்புகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க...

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக் கோரும் 2012 ஆம் ஆண்டு தீர்மானத்தை இது அடிப்படையாக கொண்டிருக்கும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்ட, மக்களுக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுமாறு இந்தத் தீர்மானம் மூலம் இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்படும்.

கடந்த ஆண்டு தீர்மானத்தை ஆதரித்த இந்தியா உள்ளிட்ட எல்லா நாடுகளும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக நிற்கும். என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதேவேளை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானம் தொடர்பான தனது நிலைப்பாட்டை இந்தியா இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும் சமீபத்திய உயர்மட்ட சந்திப்புகளில் இந்த விவகாரம் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டதாக புது டெல்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மக்களின்...

இராணுவத்தின் முயற்சிகள் அனைத்தும் நேற்றுமுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், பாதுகாப்புக் காரணங்களுக்காக சூழவுள்ள பகுதிகளை இராணுவத்தினர் துப்புரவாகப் பேணுவது அவசியம் எனினும், இடம்பெயர்ந்த மக்கள் மீளவும் குடியேறுவதற்கு ஆவலாக இருக்கும் நிலையில், அம் மக்களின் அசையாச் சொத்துக்கள் குறித்த அவர்களது அக்கறை உணர்வை கவனத்தில் எடுத்து செயற்படுவது காலத்தின் தேவையென தாம் உணர்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கின்...

பொதுநலவாய மாநாட்டில் மகாராணியார் கலந்துகொள்ளாதது எந்த வகையிலும் பொதுநலவாய உச்சி மாநாட்டிற்கு பாதகத்தை ஏற்படுத்த போவதில்லை என நான் நினைக்கின்றேன். பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரிட்டிஸ் பிரதமர் கலந்துகொள்வாரா என வினவப்பட்டபோது, அது குறித்தும் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் அலிஸ்ட் பேர்ட் தெரிவித்தார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் இலங்கையில் இடம்பெறும் பொது நலவாய மாநாட்டில், பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என நான் எதிர பார்க்கிறேன்.

இந்தவிஜயத்தின் நோக்கம் தொடர்பாகவும் அலிஸ்டர் பேர்ட் கருத்து வெளியிடுகிறார். பொதுநலவாய நாடுகளின் பொதுத்தன்மை தொடர்ந்தும் தக்கவைக்கப்பட்டுள்ளதா? பொதுநவலவாய நாடுகளின் ஜனநாயக மேம்பாடு கடைப்பிடிக்கப்படுகின்றதா? சட்டதிட்டங்கள் சரியான முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா? மனித உரிமை போன்றவை இலங்கை அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்பதை ஆராயும் நோக்கில் தமது விஜயம் அமைந்துள்ளதாக கருதுகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுநலவாய தலைவர்கள் பங்கு கொள்ளும் இந்த மாநாட்டில் பிரித்தானியா பங்கு கொள்வதா என்பது குறித்து எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இலங்கை விஜயத்தின் பிரதான நோக்கம் குறித்தும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் அலிஸ்டர் பேர்ட்டிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

எனது இலங்கை விஜயத்தின் முக்கியமானவற்றில் ஒன்று அரசாங்கத்துடனும் சிவில் சமூகத்துடனும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் உறுதியான பேச்சுவார்தைகளை மேற்கொள்ளவுள்ளேன். அத்துடன் யுத்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகள், நல்லிணக்க நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகின்றதா என்பது குறித்து ஆராய்வதாகும்.

எனது இலங்கை விஜயம், சில நாட்களே என்பதனாலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய சகல பிரதேசங்களுக்கும் விஜயம் செய்யவேண்டியதானால் இலங்கை, பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து அதிக நேரத்தை மேலதிகமாக செலவிடுகின்றேன். இதன்மூலம் இலங்கை குறித்த முழு விபரங்களையும் பெறக்கூடியதாக இருக்கும் என நான் நம்புகிறேன்.


# "இசுறு உதான" குழந்தைகளுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியின் 65 ஆவது தேசிய சுதந்திர தினக்கொண்டாட்டம் இன்றுமுதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்நாட்டில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ரூபா 500 பெறுமதியான இசு உதான பரிசுப் பத்திரம் வழங்கும் விசேட நிகழ்ச்சித்திட்டம் மக்கள் வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே 01.02.2013 ஆம் திகத) (ஜனவரி 31 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர்) முதல் 07.02.2013 (நள்ளிரவு 12.00 மணி) வரையிலான வாரத்தில் நமது நாட்டில் பிறக்கின்ற அனைத்துக் குழந்தைகளும் இப் பரிசுப் பத்திரத்தைப் பெற தகுதி பெறுகின்றனர் என்று மக்கள் வங்கியின் யாழ். உதவிப் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# பாபு சர்மாவுக்கு ஆசி



ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மாவின் 55 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சுதுமலை அம்மன் கோவில் பிரதமகுருவும், நயினை ஸ்ரீநாக பூசனி அம்பாள் ஆலய ஆதீன குருவும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியுமாகிய சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரகுருக்கள் பாபு சர்மாவுக்கு ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

அவரது ஆசிச் செய்தியில் இந்துமதம் சார்பாகவும் அந்தண குருவானவர்கள் சார்பாகவும் பாபுசர்மாவின் நடவடிக்கைகள் நல்ல விதமாக முன்னெடுத்து செல்லவும் ஆசீர்வதிக்கின்றேன் என்றுள்ளது.

# கரவெட்டிப் பிரதேச சபையில் சூடுபறக்கும் விவாதம்

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டிப் பிரதேச சபைக் கூடடத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருவருக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் கூடடத்தில் ஒரு மணித்தியாலயம் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி பிரதேச சபைக் கூடடம் நேற்று முன்தினம் சபைத் தவிசாளர் வியாகேசு தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவாதங்கள் இடம்பெற்றபோது ஆளும் கூட்டமைப்பு உறுப்பினர்களான கே.குகதாஸ், கே.பரஞ்சோதி ஆகிய இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இரு தடவைகள் இவர்களுக்கிடையில் வாய்த்தர்க்கங்கள் ஏற்பட்ட நிலையில் ஏனைய உறுப்பினர்கள் அருகே சென்று கைகலப்பில் ஈடுபடாத வண்ணம சமாதானம் செய்தனர்.

செல்வபுரம் மக்களுக்கான குடிநீர் விநியோகத்திட்டம் திறப்புவிழா பற்றி ஒருவர் மாறி ஒருவர் விவாதித்தபோதே இவ் வாய்த்தர்க்கங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் சமரசத்தை அடுத்துக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றதுடன தீர்மானங்களும் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(116)

## யாழ். நகர...

அங்கிருந்து சென்ற நிலையில் பெற்றோரின் வரவுக்காகக் காத்திருந்த சமயம் குறித்த சிற்றூழியர் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றார்.

இதனை அடுத்துப் பாதிக்கப்பட்ட மாணவி அதிபரிடம் தனக்கு நிகழ்ந்தவற்றைக் கூறச் சென்ற சமயம் குறித்த சிற்றூழியர் பாடசாலையின் விடுதியின் யன்னல் ஓரமாக மறைந்து நின்று சிறுமியை நோக்கி கத்தியைக் காண்பித்து பயமுறுத்தியிருக்கின்றார்.

இதனை அடுத்து பயந்த சிறுமி அதிபரிடம் விடயத்தைக் கூறாமல் வீடு சென்றதும் பெற்றோரிடம் விடயத்தைக் கூறியிருக்கிறார். இதனை அடுத்து நேற்றுக்காலை பாடசாலைக்குச் சென்ற பெற்றோர் மற்றும் உறவினர்கள் அங்கு கடமையில் இருந்த குறித்த சிற்றூழியரைப் பிடித்து தாக்கியதுடன் யாழ். பொலிஸாரிடம் தகவல் கொடுத்ததனை அடுத்து அந்தச் சிற்றூழியர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


யாழ். திருநகரைச் சேர்ந்த 65 வயதுடைய குறித்த சிற்றூழியரே இந்த துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இவர் சுமார் ஐந்து வருடங்கள் சிற்றூழியராக இங்கு கடமையாற்றி வருவதாகவும் மேலும் தெரியவருகின்றது.

யாழ். நகரின் பிரபல பாலர் 'பாடசாலை ஒன்றில் இத்தகைய சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பது மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை குறித்த சிற்றூழியர் அந்த மாணவியை ஏற்கனவேயும் பலமுறை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியிருப்பதாகவும் அவர் சிறு மியை பயமுறுத்தி வந்தமையினாலேயே சிறுமி இதனைத் தெரிவிக்காமல் இருந்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

அத்துடன் பாடசாலை விட்டதும் பெற்றோர் உரிய நேரத்தில் வந்து சிறுமியை வீட்டிற்கு அழைத்துச் செல்லாததன் காரணமும் இந்தச் சம்பவத்திற்குக் காரணமாகவும் அமைந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை நிர்வாகமும் இவ்வாறான விடயங்களில் அக்கறை எடுக்கத் தவறியுள்ள தாகவும் நோக கப்படுகிறது.

(பா)

# அவுஸ்ரேலிய தூதுக்குழு அமைச்சர் டக்ளசுடன் பேச்சு



(கொழும்பு)

அவுஸ்ரேலிய நாட்டின் எதிர்க்கட்சி பிரதித் தலைவர் யூலிபிஹொப் தலைமையிலான குழுவினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து அமைச்சின் செயற்திட்டங்கள் மற்றும் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக கலந்துரையாடினர்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றையதினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக இக்குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து அவுஸரேலிய நாட்டு பிரதிநிதிகள் அமைச்சரிடம் கேட்டறிந்து கொண்டதுடன், இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியாவிற்குச் செல்வோர் தொடர்பாகவும் அவர்கள் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்களது நலன்சார் விடயங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்தும் இதன்போது அதிக கவனம் செலுத் தப்பட்டது.

இதனிடையே நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் சகல தமிழ்க் கட்சிகளும் பங்குபெறுவதன் மூலம், சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என வலியுறுத்திய அமைச்சர், கடந்த காலங்களில் இவ்வாறான தீர்வுகளை தமிழ் தலைமைகள் ஆக்கபூர்வமான முறையில் ஏற்றுக்கொள்ளாததே இந்நாட்டில் ஏற்பட்ட கொடிய போருக்குக் காரணம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் அவுஸ்ரேலிய நாட்டின் எதிர்க்கட்சி பிரதித் தலைவர் யூலிபிஹொப் தலைமையிலான இத்தூதுக் குழுவினருடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, அமைச்சரின் இணைப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

கடந்த 27 ஆம் திகதி இலங்கைக்கு வந்த மேற்படி குழுவினர் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டதுடன் ஏனைய சில பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்த நிலையில் நேற்றைதினம் அவுஸ்ரேலியாவுக்கு பயணமாகின்றனர். இதனிடையே தமது நாட்டுக்கு வருகை தரவேண்டும் என அமைச்சருக்கு அவுஸ்ரேலிய பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "விஸ்வரூபம்" இலங்கையில் தடை இல்லை



(கொழும்பு)

நடிகர் கமலஹாசன் நடித்த விஸ்வரூபம் திரைப்படத்தை இலங்கையில் திரையிடுவதற்கு தடைவிதிக்கவில்லை. தற்காலிகமாக அந்த திரைப்படம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படம் தொடர்பில் இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவெடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

விஸ்வரூபம் படத்திற்கு இலங்கையில் தடைவிதிக்கவில்லை, தற்காலிகமாக அந்த திரைப்படம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படம் தொடர்பில் ஆலோசனை பெற்றுக்கொண்டிருக்கின்றோம்.

முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இந்தத் திரைப்படத்தை பார்த்து தங்களுடைய விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். தமிழகத்தில் என்ன நடக்கின்றது. தமிழக முதல்வர் ஜெயலலிதா எவ்வாறான முடிவுகளை எடுக்கின்றார் என்று நாம் காத்துக் கொண்டிருக்கவில்லை.

உலகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதனை அவதானித்துக் கொண்டிருக்கி றோம். நான் தாராளவாத [illegible] கையைக் கொண்டவன் [illegible] தால் இந்தத் திரைப்பட[illegible] திரையிட்டு மக்களின் விமர்சனத்திற்கு விட்டிருக்க வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும் என்றார்.

# ஹங்கேரி சபாநாயகர் கொழும்பு விஜயம்



(கொழும்பு)

ஹங்கேரி நாட்டின் சபாநாயகர் லெஸ்லோ கோவர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளதாக ஹங்கேரி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை வந்துள்ள அவர், எதிர்வரும் நான்காம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரிலேயே அவர் இலங்கை விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வந்துள்ள ஹங்கேரி சபாநாயகர், சபாநயாகர் சமல் ராஜபக்ஷ மற்றும் அரச பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை சந்திக்கவுள்ளார்.

இதுதவிர, ஹங்கேரி மற்றும் இலங்கைகக்கு இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மக்களின் உரிமைகளை வழங்கத் தவறிவிட்டது அரசு

## மக்கள் விடுதலை முன்னணி நீலிக்கண்ணீர்

(கொழும்பு)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இருப்பினும் வடக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்ட இந்த அரசாங்கம் தவறியுள்ளது. அத்துடன், வடக்கிலுள்ள மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க இந்த அரசாங்கம் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு கோரி சகோதரத்துவத்திற்கான மக்கள் அரண் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஹந்துன்நெத்தி எம்.பி கூறியதாவது,

யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கிருந்த மக்களை மீள்குடியேற்றுகிறோம் என்று கூறி இந்த அரசாங்கம் அம்மக்களை அநாதரவான நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது. தமது சொந்தக் காணிகளை இழந்த நிலையில் இம்மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, இம்மக்களுக்கு மத்தியில் தற்போது இன, மத வேறுபாடுகள் கிளறப்பட்டுள்ளன. இவ்வாறு பிரச்சினையைக் கிளறி அதன்மூலம் சில தரப்பினர் நன்மையடையப் பார்க்கின்றனர். இவ்வாறான பிரச்சினைகளை தீர்த்து வைக்கவும் அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.



# பட்டதாரிகள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்பின் பேரில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்ட 32 தமிழ், முஸ்லிம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ல்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்து கொண்டதுடன், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் மேலதிக செயலர் சுசிமா விஜயசேகர, மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா. நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளர் வாசுதேவ, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் செயலாளர் முஹம்மட் றுஸ்வின் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 32 பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோரினால் நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பள்ளி சிறுவர் உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் விவகார உத்தியோகத்தர் என 4 படித்தரங்களாக நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாணவன் தற்கொலை

(கொழும்பு)

கண்டி - தவுலகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாரங்வல பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தாம் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கப் பெறாததன் காரணமாக குறித்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டி - கிங்ஸ்வுட் வித்தியாலயத்தில் கல்வி கற்ற தமித் சாமர என்ற மாணவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெதர்லாந்து கடற்படை கொழும்பில் கால் ஊன்றுகிறது

சர்வதேச வர்த்தகக் கப்பல்களுக்கு கடற்கொள்ளையர்களிடமிருந்து பாதுகாப்பு வழங்குவதற்கான முக்கிய தளமாக கொழும்பை பயன்படுத்த நெதர்லாந்து கடற்படை தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கப்பல்கள் டச்சு பாதுகாப்பு படையினரை இலங்கையின் சில துறைமுகங்களில் ஏற்றி இறக்கும் ஒழுங்கொன்று இலங்கை அரசாங்கத்துடன் செயயப்பட்டுள்ளது.

இலங்கை சட்டத்துக்கமைய ஆயுதங்கள், வெடிபொருட்கள் கையாளப்படுமென கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகம் கூறியுள்ளது.

டச்சு (நெதர்லாந்து) கப்பலிலிருந்து கொழும்பு துறைமுகத்தில் கடந்த செவ்வாய் இறங்கிய டச்சு கடற்படையினர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து நேற்று நெதர்லாநது பயணமாகியுள்ளனர்.

இந்தக் கடற்படையினர் எகிப்திலுள்ள சுயெஸ் கால்வாயிலிருந்து புறப்பட்ட கப்பலுக்கு பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்ட கப்பல் பாதுகாப்பு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். கப்பல் மீதான கடற்கொள்ளையரின் தாக்குதல்கள் அநேகமாக சோமாலிய கரைக்கு அப்பால் அரபுக்கடலில் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளதால் கப்பல் பாதுகாப்பு மையமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் முக்கிய சர்வதேச கடல்வழிப்பாதையை பாதுகாப்பதற்கான இலங்கையுடனான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது என நெதர்லாந்து தூதரகம் கூறியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.